# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் லெவெல் 3 மற்றும் 4

**B** தொடர்

பாடங்கள் 1 - 6

www.besweb.com

# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியில்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேஷமாக ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் **A** 4 லும் சில பகுதிகளில் **A** 5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடையகருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் "நாம் கற்றுக்கொள்வது" என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்:** ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிகூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

## முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

> “சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
> காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
> செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்”

# பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (பள்ளி செல்லுமுன்)<br>நிலை 1 (வயது 1-7)<br>நிலை 2 (வயது 8-10) | நிலை 3 (வயது 11-13) | நிலை 4 (வயது 14+) |
|---|---|---|---|
| **தொடக்க பாடங்கள்** | 1.தொடக்கபாடம்-அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி |
| **A தொடர்** | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு & வீழ்ச்சி<br>2. ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| **B தொடர்** | 1. கிறிஸ்துவின்ஆரம்பகால வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. நற்செய்தி எழுத்தாளர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபு & அவரது குடும்பம்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர் 2:42 - முன்னே உள்ள வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம<br>12.கிறிஸ்துமஸ் கதை |
| **C தொடர்** | 1. தானியேல்<br>2. தொடரும் அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. தொடரும் அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசுவின் கூற்றுகள்<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. மேலும் பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

| | B1 - நிலை 3<br>பாடம் 1 - உவமைகள்<br>தலைப்பு - எனக்கு அயலான் யார்? | B1 - நிலை 4<br>பாடம் 1 - உவமைகள்<br>தலைப்பு - இரண்டு கடனாளிகள் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 10: 25-37**<br>**முக்கிய வசனம்: லூக்கா 10: 27**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.இனமோ மதமோ பாராமல் நமது உதவி தேவைப்படு-பவர்கள் நமது அயலார்கள்.<br>2.நாம் தேவனை நேசிக்கும்போதுஇ நம்முடைய அயலகத்-தாரின் ஆவிக்குரியஇ சரீர அல்லது பொருள் தேவைகளு-க்கு உதவுவதன் மூலம் நம் அன்பை செயல்பாட்டில் காண்பிக்க முடியும். | **தியானப் பகுதி: லூக்கா 7: 36-50**<br>**முக்கிய வசனம்: ரோமர் 5: 1**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நாம் அனைவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பார்வையில் கடனாளிகள் - நாம் அனைவரும் பாவம் செய்தவர்களானபடியால் நாம கடனாளிகள்<br>2. நம் வாழ்க்கையில் பரிசுத்தத்திலும் சேவையிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அன்பும் பக்தியும் காண்பிக்க வேண்டும். |
| | அயலார் யார் என்பதைப் பற்றி விவாதிக்கவும், ‘அருகில் இருப்பதால்’ அல்ல நாம் நெருங்கிய அயலவர்களாக மாறுவதுஇ மாறாக நம்முடைய உதவி தேவைப்படுபவர்களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும் நாம் காட்டும் கருணை மற்றும் நட்புதான் நெருங்கிய அயலராக மாற்றுகிறது என்ற கருத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். | இந்த உவமையின் பின்னணியை கீழே உள்ளதை உட்படுத்தி அமைக்கவும்:<br>☐ மூன்று உண்மையான நபர்கள் - கர்த்தராகிய இயேசுஇ பாவியான பெண் மற்றும் பரிசேயனான சீமோன்;<br>☐ மூன்று கற்பனை நபர்கள் - கடனளிப்பவர்இ 500 வெள்ளிக்காசு கடன்பட்டவன் மற்றும் 50 வெள்ளி-க்காசு கடன்பட்டவன்;<br>☐ மூன்று கேள்விகள் - **42,44 மற்றும 49 வசனங்கள்.** |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>இந்த உவமையின் பயன்பாட்டை விளக்குங்கள்:<br>1. A) திருடர்களின் கைகளில் விழுந்த மனிதன் **(வசனம் 30)** பறிக்கப்பட்டுஇ காயமடைந்து குற்றுயிராயிருக்கிறான்;<br>B) ஒரு சமாரியன் இரக்கத்தைக் காட்டுகிறான் **(33 வது வசனம்)** அவனது காயங்களைக் கட்டிஇ தான் திரும்பி வரும் வரை அவனை கவனித்துக்கொள்வதை உறுதிசெய்கிறான். **(வசனங்கள் 33-35)**<br>2. A) ஏதேன் தோட்டத்தில் மனிதன் விழுந்ததன் விளைவாகஇ தேவன் நம்மை பாவங்களில் ‘மரித்-தவர்களாக’ பார்க்கிறார். **(எபேசியர் 2: 1)**<br>B) தேவன் பாவிகளாகிய நமக்கு இரக்கத்தை-தக் காட்டினார்இ அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார்இ இதனால் அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெ-தழுதல் மூலம் நம்முடைய பாவத்திலிருந்தும்இ நம் வாழ்வில் அதன் தாக்கத்திலிருந்தும் குணமடைய முடியும். நல்ல சமாரியனைப் போலவேஇ நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய இயேசு வந்தார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. சீமோனின் சுயநீதி; அந்தப் பெண்ணின் மனந்திரும்புதல்இ மகிழ்ச்சிஇ அன்பு மற்றும் நன்றியுணர்வின் கண்ணீர்; இயேசு இந்த பாவியான பெண்ணைத் தவிர்த்திருக்க வேண்டும் என்று நினைத்தபோது சீமோனின் எண்ணங்களை கர்த்தராகிய இயேசு அறிய முடிந்தது. **(வசனங்கள் 36-39)**<br>2. இந்த உவமை இயேசு நமக்கு கடனளித்தவர் என்பதை விளக்கும் நோக்கம் கொண்டது. நாம் அனைவரும் தேவனுக்கு கடன்பட்டிருக்கிறோம்இ இயேசு சிலுவையில் மரித்தபோதுஇ அவர் நமக்காக கடனை செலுத்தினார்! சீமோன் தன்னை 50 வெள்ளிக்காசு கடனாளியாகவும் அந்தப் பெண்ணை 500 வெள்ளிக்காசு கடனாளியாகவும் கண்டான் என்பதை இயேசு அறிந்திருந்தார். பாவத்தில் எந்த அளவும் இல்லை என்று சீமோன் கற்றுக்கொள்ள வேண்டும் என இயேசு விரும்பினார். 50 வெள்ளிக்காசு கடனாளி மற்றும் 500 வெள்ளிக்காசு கடனாளி இருவரும் தங்கள் கடனை செலுத்த முடியவில்லைஇ ஆனால் கடன் கொடுத்தவன் அவர்கள் இருவரையும் மன்னித்தான். **(வசனங்கள் 40-43)** |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்த உவமையின் பயன்பாட்டை அவர்கள் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய அனைவருக்கும் வினாடி வினா நடத்துங்கள். | **அப்போஸ்தலர் 13: 38-39**-ஐ வாசித்துஇ இந்த பாடத்தில் கர்த்தராகிய இயேசு கற்பித்ததை எவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும். எபேசியர் 4: 32-' பாவம் மன்னிக்கபட்டவர்கள் எப்படி நடக்கவேண்டும் |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.மாணவர்கள் மனமாற்றத்தை அனுபவித்திருக்கிறார்களா?<br>2.அப்படியானால்இ அவர்கள் பின்வரும் நபர்களிடம் நல்ல அயலாராக அல்லது நட்பாக இருக்கக்கூடிய வழிகளைப் பற்றி சிந்தியுங்கள்: | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.சீமோன் கர்த்தராகிய இயேசுவை அலட்சியமாக நடத்தினான்இ அவன் செய்த பாவத்திலிருந்து மனந்திரும்பியதற்கும்இ மன்னிப்பு மற்றும் சமாதானத்தை அனுபவித்ததற்கும் எந்த ஆதாரமும் இல்லை. **(வசனம் 50)** |

| | B1 - நிலை 3<br>பாடம் 2 - உவமைகள்<br>தலைப்பு - பணக்கார விவசாயி | B1 - நிலை 4<br>பாடம் 2 - உவமைகள்<br>தலைப்பு - எனக்கு அயலான் யார்? |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 12: 13-21**<br>**முக்கிய வசனம்: லூக்கா 12: 15**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.பணக்கார விவசாயி சொத்தால் பணக்காரனாக இருந்தான் ஆனால் ஆவிக்குரிய ரீதியில் திவாலாவானான். ஏனென்றால் அவன் தேவனை தன் வாழ்க்கையிலிருந்து விலக்கினான். பொருளை அல்ல தேவனை நம் வாழ்வில் நாம் முதன்மையான இடத்தில் வைத்திருக்கிறோம் என்றால் அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்துவார். | **தியானப் பகுதி: லூக் 10: 25-37 பிலி 21-11**<br>**முக்கிய வசனம்: லூக்கா 10: 27**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இனம் அல்லது மதம் சாராமல் நமது உதவி தேவைப்படுபவர் நம்முடைய அயலார் அவர்களுக்குத் தயவைக் காண்பிப்பது நமது பொறுப்பு.சிலுவையில் அவர் மரித்ததன் மூலம் சமாரியனைப் போலவே கர்த்தராகிய இயேசு நம்மை மீட்க முடியும். அவர் நம்மை பாதுகாப்பார், தேவகளை சச்திப்பார் |
| அறிமுகப்படுத்-துங்கள் | பிடித்த உடைமைகளைப் பற்றி பேசுங்கள்.<br>'பேராசை' என்ற பாவத்தைப் பற்றி விவாதித்துஇ பூமிக்குரிய காரியங்களை சொந்தமாக வைத்திருப்பது மற்றும் பதுக்கி வைப்பது ஒரு சுயநல இச்சை என்பதை அவர்கள் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்இ நாம் சாகும்போது அதை எடுத்துச்செல்ல முடியாது.<br>பத்து கட்டளைகளைப் பார்க்கவும்இ கடைசியாக 'நீ ஆசைப்படக்கூடாது' என்று எப்படி சொல்கிறார் என்பதை விளக்குங்கள். **(யாத்திராகமம் 20: 17)** | நமது அயலார் யார் என்பதைப் பற்றி பேசுங்கள்.<br>'அருகில்' இருப்பதைக் காட்டிலும்இ தேவைப்படுபவர்களிடம் கனிவாகவும் நட்பாகவும் இருப்பதே முக்கியம் என்று மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். நம்மை விரும்பாதவர்கள் உட்பட அனைவரிடமும் தமது பிள்ளைகள் கருணை காட்ட வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார் - இது கிறிஸ்தவர்களின் ஒரு உயரிய பண்பு! |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயற்கையான மற்றும் தற்காலிக காரியங்களில் ஈடுபாடுஇ ஆனால் ஆவிக்குரிய காரியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய புரிதல் இல்லாததால் இந்த மனிதனை ஒரு 'மூடன்' என்று இயேசு அழைத்தார்.<br>a. தேவன் இல்லாத மூடன் - தேவன் இல்லாமல் தனது வாழ்க்கையை வாழ்ந்தான். ஒரு வாழ்க்கை 'பல காரியங்கள்' நிறைந்ததாக இருக்கலாம்இ ஆனால் அதில் தேவன் இல்லாவிட்டால்இ அது ஒரு வெற்று வாழ்க்கை. அவனுடைய உடைமைகள் அனைத்தும் தேவனிடமிருந்து வந்தன என்பதை புரிந்துகொள்ளவில்லை.<br>b. ஒரு எளிய மூடன் - அவன் உண்மையில் ஒரு ஏழையானஇ பணக்காரன் - அவனது நித்திய எதிர்காலத்தைப் பொறுத்தவரை ஏழை. அவன் தேவனை விட செல்வத்தை மையமாகக் கொண்டான்.<br>c. ஒரு பேராசையுள்ள மூடன் - அவன் வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு பாதுகாப்புஇ சொகுசு மற்றும் உண்டு குடிப்பதால் தனது சொந்த ஆசைகளை பூர்த்தி செய்வது பற்றி பேசும் சுயநலக்காரனாக இருந்தான். **(வசனம் 19)** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நிபுணனான ஒருவன் கர்த்தராகிய இயேசுவிடம் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோதுஇ கர்த்தர் அவனை நியாயப்பிரமாணத்திற்கு வழிநடத்திஇ அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று கேட்டார். அதற்கு தேவன் மீதும்இ அயலார் மீதும் முழு அன்பு செலுத்தவேண்டும் என்றான். நியாயப்பிரமாணத்தின் நோக்கம் அல்லது பத்து கட்டளைகள் நம்மை பாவத்திலிருந்து காப்பாற்றுவதல்லஇ மாறாக நாம் எப்படிப்பட்ட குற்றவாளிகள் என்பதை நமக்குக் காண்பிப்பதை இயேசு உணர்த்தினார்.<br>2. அவன் தேவனுடைய வைத்திருக்கும் தரத்தைக் குறைத்துஇ தன்னை இரட்சிக்கும்படி தேவனிடம் கேட்டான் என்பதை நியாயப்பிரணானிகன் புரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும் அவன் பெருமிதத்தோடு கர்த்தரிடம் "என் அயலான் யார்?" என்று கேட்கிறான். அவனுக்குப் பதில் சொல்லஇ கர்த்தர் நல்ல சமாரியனின் கதையைச் சொல்கிறார். ஆசாரினும் லேவியனும் யூதர்கள். யூதர்கள் சமாரியர்களை வெறுத்தார்கள். அவர்கள் உதவ மறுத்துவிட்டனர் ஆனால் வெறுக்கப்பட்ட சமாரியன் அடிபட்டவனைக் காப்பாற்ற வந்தான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | பணக்கார விவசாயி மூன்று மிக மோசமான தவறுகளைச் செய்தான்:<br>1.வாழ்க்கையின் நோக்கத்தை அவன் தவறாகப் புரிந்துகொண்டான். பிலிப்பியர் 1: 21ஐ வாசித்து பவுலுடைய வாழ்க்கையின் நோக்கத்தை விளக்குங்கள். | வேதத்தில் பிலிப்பியர் நிருபத்தை வாசிக்கவும்இ 1-4 வசனங்கள் கிறிஸ்தவர்களிடம் உள்ள பிறரோடு பேணவேண்டிய நல்லிணக்க குணங்களைக் குறிக்கின்றன 5-11 வசனங்கள் கர்த்தராகிய இயேசு எல்லோருக்காகவும் மரித்ததை காட்டுகின்றன. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. மற்றவர்களுக்கு உதவ நமது உடைமைகளைப் பயன்படுத்தக்கூடிய வழிகளை ஒரு பட்டியலிடுங்கள்.<br>2. கிறிஸ்தவர்களாக இல்லாதவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க முன்னுரிமை அளியுங்கள் **(யோவான் 3: 16)** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>எல்லோரும் நமது அயலார்கள்:<br>1.சரீரஇ ஆவிக்குரிய அல்லது பொருளாதாரத் தேவைகள் உள்ளவர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம்?<br>2.நல்ல அயலாரைப் பற்றி **லூக்கா 6: 35** என்ன சொல்கிறது? |

| | B1 - நிலை 3<br>பாடம் 3 - உவமைகள்<br>தலைப்பு - விதைப்பவன் | B1 - நிலை 4<br>பாடம் 3 - உவமைகள்<br>தலைப்பு - ஒரு மூடன் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: மாற்கு 4: 1-20**<br>**முக்கிய வசனம்: மாற்கு 4: 20**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.விதை தேவனுடைய வார்த்தை.<br>2.பல்வேறு வகையான மண் மனித இதயங்களை குறிக்கிறதுஇ அவை தேவனுடைய வார்த்தையை எந்தளவு ஏற்றுக்கொள்கின்றன என்பதைக் காட்டுகிறது. | **தியானப் பகுதி: லூக்கா 12: 13-21**<br>**முக்கிய வசனம்: லூக்கா 12: 15**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. ஒருவருடைய ஜீவன் சொத்தில் இல்லைஇ ஆகையால் பேராசைப்படுவது தீமை.<br>2. செல்வத்தை பதுக்கி வைப்பதில் கவனம் செலுத்துவதுஇ ஒருவரின் ஆத்மாவை இழக்க நேரிடுவதோடு பேரழிவை விளைவிக்கக்கூடிய முட்டாள்தனம் ஆகும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | தான் கற்பித்த சில உண்மைகளை வலியுறுத்த இயேசு அடிக்கடி உவமைகளைச் சொன்னார் என்பதை விளக்குங்கள். பொதுவாக உவமைகளுக்கு ஆழ்ந்தஇ ஆவிக்குரிய அர்த்தம் இருந்தது.<br>சில நேரங்களில் அவர் அர்த்தத்தை விளக்கவில்லைஇ ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவர் ஒரு முழு விளக்கத்தை அளித்தார்.<br>விதை விதைக்கப்பட்ட வெவ்வேறு இடங்கள் தேவனுடைய வார்த்தைக்கு வெவ்வேறு விதத்தில் பதிலளிப்பதைக் குறிக்கின்றன. | இந்த உவமையின் பின்னணியைப் பற்றி விவாதிக்கவும். ஒரு மனிதன் ஒரு உயிலைப் பற்றிய ஒரு சர்ச்சையில் தலையிட கர்த்தரிடம் கேட்கிறான். அவர் உலகத்திற்கு வந்ததன் நோக்கம் பாவியான ஆண்களையும் பெண்களையும் இரட்சிக்கத்தான் உயில்களைப் பற்றிய சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அல்ல என்பதை கர்த்தர் அவனுக்குக் காண்பிக்கும் விதத்தை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. வழியருகேயுள்ள நிலம் **(வசனம் 15)** கர்த்தராகிய இயேசுவிடம் "மாட்டேன்" என்று கூறுபவர். வார்த்தையை பறிக்கும் பறவைகள் சாத்தானைச் சித்தரிக்கப்படுகின்றன. இந்த நபர் தேவனுடைய வார்த்தையில் அலட்சியமாக இருக்கிறார்.<br>2. கற்பாறையான நிலம் **(16-17 வசனங்கள்)** விசுவாச அறிக்கைச் செய்கிறவர் சிறிது காலம் நன்றாகச் செல்கிறார் பாடுகள் வரும்போது அல்லது கிறிஸ்துவுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும்போது அவர் கொடுக்கவேண்டிய விலை மிகப் பெரியது என்று முடிவெடுத்து முற்றிலும் கைவிடுகிறவர்.<br>3. முள்ளுள்ள நிலம் **(18-19 வசனங்கள்)** ஒரு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தி உண்மையான கிறிஸ்தவர்களாக காணப்படும் நபர்கள். இருப்பினும், அவர்கள் வணிகம், செல்வம் மற்றும் உலக காரியங்களில் அதிக ஆர்வம் காட்டிஇ தாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற கூற்றையே கைவிடுகிறார்கள்; அவர்கள் 'பயனற்றவர்கள்'. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஆஸ்தி வாழ்க்கையின் முக்கிய காரியம் அல்ல என்பதை இந்த உவமை விளக்குகிறது. அது தேவனால் நமக்கு வழங்கப்படுகின்றதுஇ மேலும் அது தேவனை கனப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும். தனக்கு மிச்சமுள்ள ஏராளத்தை தேவையுள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதை இந்த மனிதன் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.<br>2. அவன் எதிர்காலத்தைத் திட்டமிட்டான் - **17-19 வசனங்களில்** 'நான்' மற்றும் 'என்' ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தேவனை விட்டு தன்னிச்சையாக செயல்படுவதை கவனியுங்கள். இந்த மனிதனின் வாழ்க்கைக்கு தேவன் வேறு திட்டங்களை வைத்திருந்தாஇ அன்றிரவு அவன் இறந்துவிடுவான் என்று சொன்னார் **(வசனம் 20)**. அவனது திட்டங்கள் அனைத்தும் கல்லறையில் முடிவடையும்இ அவன் நித்திய ராஜ்யத்திற்கு எந்த ஆயத்தமும் செய்யவில்லை என்பதால் அவன் ஒரு முட்டாள் - **ஆமோஸ் 4: 12**-ல் உள்ள எச்சரிக்கையைப் பாருங்கள்.<br>3. இந்த உவமையில் தேவன் எப்படி ஒரு நேர்-த்தியான கேள்வியைக் கேட்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுங்கள் **(வசனம் 20)** |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | நான்கு வெவ்வேறு வகையான மண்ணில் உள்ள வேறுபாடுகளை மாணவர்கள் புரிந்துகொள்வதை உறுதி செய்யுங்கள். 20 வது வசனத்தில் வெவ்வேறு பலன்களைப் பற்றி விவாதியுங்கள். | **நீதிமொழிகள் 11: 4 & 29** மற்றும் **மத்தேயு 6:19-21** ஆகியவை இந்த பாடத்தை உண்மையில் எவ்வாறு சுருக்கமாகக் கூறுகின்றன என்பதைக் கவனியுங்கள். பேராசையைக் குறித்து **யாத்திராகமம் 20: 17** ஐயும் பாருங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. எந்த வகை நிலம் ஒவ்வொரு இதயத்தையும் சிறப்பாகக் குறிக்கிறது?<br>2. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரைஇ கர்த்தராகிய இயேசுவுக்காக பள்ளியிலோ அல்லது வேறு இடத்திலோ ஒரு நிலைப்பாட்டை எடுத்த அனுபவம் உண்டா? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.ஒருவரின் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை உறுதி செய்வதன் முக்கியத்துவம் "எனக்கு வாழ்ந்திருப்பது கிறிஸ்து". **(பவுல் பிலிப்பியர் 1:21)**<br>2. நம்முடைய இரட்சிப்பை இழந்துவிடாமலிருக்க பேராசையைத் தொடராததன் முக்கியத்துவம். |

| | B1 - நிலை 3<br>பாடம் 4 - உவமைகள்<br>தலைப்பு - மற்றவர்களை மன்னித்தல் | B1 - நிலை 4<br>பாடம் 4 - உவமைகள்<br>தலைப்பு - ஒரு மூடன் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: மத்தேயு 18: 21-35**<br>**முக்கிய வசனம்: எபேசியர் 4: 32**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.கிறிஸ்தவர்கள் எப்படி மன்னிக்க வேண்டும் என்று கற்பிக்க இந்த உவமை கூறப்பட்டது.<br>2.மற்றவர்களை வரம்பில்லாமல் மன்னிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். | **தியானப் பகுதி: லூக்கா 14: 15-24**<br>**முக்கிய வசனம்: யோவான் 6: 37**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.'என்னிடம் வாருங்கள்' என்ற அவருடைய அழைப்பிற்கு செவிசாய்க்கும் அனைவருக்கும் தேவன் பரலோகத்தில் ஒரு விருந்து அளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். **(மத்தேயு 11: 28)** |
| அறிமுகப்படுத்-துங்கள் | மன்னிக்கும் விஷயத்தில் பேதுருவுக்கு இருந்த பிரச்சினையை விளக்குங்கள்.<br>பழைய ஏற்பாட்டில் ஒரு நபர் அதிகபட்சம் மூன்று முறை அல்லது நான்கு முறை மட்டுமே மன்னிப்பார் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதை விளக்குங்கள் **(ஆமோஸ் 2: 6).** கர்த்தராகிய இயேசுவின் சீடராக இருப்பதினால்இ அவன் மிகவும் தாராளமாக இருக்க வேண்டும் என்று நினைத்து ஏழு முறை என்று பரிந்துரைக்கிறான் **(வசனம் 21)**. | கிழக்கு தேசத்தில்இ திட்டமிடப்பட்ட விருந்துக்கு இரண்டு அழைப்புகளை அனுப்புவதை சுட்டிக்காட்டவும். முதல் அழைப்பு ஆயத்தம் தேவை என்றும் இரண்டாவது அழைப்பு விருந்து தயாராக இருப்பதையும் சுட்டிக்காட்டியது.<br>இந்த நிகழ்ச்சியில் அழைக்கப்பட்டவர்களுக்கு கலந்துகொள்ள விருப்பமில்லை மேலும் மறுப்பதற்கான சாக்குபோக்குகளைக் கூறினர். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தனது பெரிய கடனை செலுத்த முடியவில்லை என்பதை வேலைக்காரனின் எஜமான் உணர்ந்தபோதுஇ அவர் அவன்மீது மனதுருகி கடனைத் தள்ளுபடி செய்தார். (வசனங்கள் 25-27) இது கருணைச் செயலாகும்இ<br>2. பாவிகளாகிய நாம் பாவத்தின் பெரும் கடனை செலுத்த முடியாதுஇ அவர் தரும் தண்டனையிலிருந்துத் தப்பிக்க தேவனுடைய கருணை தேவை. சிலுவையில் உலகின் பாவத்தின் கடனைச் செலுத்திய கிறிஸ்துவின் செயலின் மூலம் நாம் இரட்சிப்பைப் பெற முடியும். தேவன் தம்முடைய குமாரனை 'அநேகரை மீட்கும்பொருளாகக்' கொடுத்தார். (மத்தேயு 20: 28)<br>3. மன்னிக்கப்பட்ட வேலைக்காரன் தன்னிடம் மிகக் குறைந்த கடன்பட்ட சக ஊழியனை மன்னித்திருக்க வேண்டும். அவன் தனக்குக் கொடுக்க வேண்டியதை ஒப்பிடுகையில் அற்பமானது. தனக்குக் காட்டிய கருணையை மறந்துவிட்டான்.<br>4. கர்த்தராகிய இயேசு நம்மிடம் நடந்துகொள்வதைப் போல நாமும் மற்றவர்களிடமும் நடந்து கொள்ள வேண்டும். நாம் அவருக்கே உரியவர்கள் என்று கூறினால்இ நம்முடைய எதிரிகள் உட்பட மற்றவர்களை மன்னிக்க வேண்டும். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்து இரட்சிப்பின் வேலையை முடித்தார் என்பதையும்இ இதன் விளைவாகஇ சுவிசேஷ அழைப்பு அனைவருக்கும் வருகிறது என்பதையும் இந்த 'திருவிருந்து' நமக்கு நினைவூட்டுகிறது.<br>2. மூன்று சாக்குபோக்குகளும் உண்மையானவை அல்ல ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வருகையை அனுமதிக்க ஏற்பாடுகள் செய்திருக்கலாம்: முதல் சாக்குபோக்கு (வசனம் 18); அவன் மன்னிப்பு கேட்டாலும் ஒரு யூதர் நிலத்தை பார்க்காமலேயே வாங்குவார் என்று நம்புவது கடினம் விருந்து இரவில் என்பதால் அவர் அதை எப்படியும் பார்க்க முடியாது. இரண்டாவது சாக்குபோக்கு (வசனம் 19); இந்த மனிதன் மிக முரடன் மன்னிப்பு கேட்கவில்லை தனது எருதுகளுக்கே முதலிடம் கொடுப்பதாக உணர்கிறோம். மூன்றாவது சாக்குபோக்கு (வசனம் 20); இந்த மனிதன் ஒரு மோசமான காரணத்தைச் சொன்னான்இ ஆனால் அவன் சுயநலமில்லாதிருந்தால் மனைவியை விருந்துக்கு அழைத்து வந்திருக்க முடியும். |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்த பத்தி 'இரக்கம்' மற்றும் 'கிருபை' இரண்டையும் எவ்வாறு செயல்படுத்தி காட்டுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும். **தீத்து 3: 5.** 'கிருபையினாலே நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள்.' கிருபையினாலே இரட்சிக்கப்படுவது தேவனுடைய பரிசு **எபேசியர் 2: 8** | இந்த உவமையின் முதன்மை பயன்பாடு என்னவென்றால்இ சுவிசேஷத்தை நிராகரித்தவர்கள் யூதர்கள்இ பின்னர் அது மிகவும் செவிசாய்க்கக்கூடிய புறஜாதி மக்களுக்கு வழங்கப்பட்டது. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. இந்தப் பாடம் 'மன்னிப்பு' விசயத்தில் உங்களுக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது?<br>2. கர்த்தராகிய இயேசுவால் நாம் மன்னிக்கப்பட்டிருந்தால்இ நாம் ஏன் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. 'நெடுஞ்சாலைகள் மற்றும் வழியோரங்களிலும்' இருந்து வந்தவர்கள் காட்டியபடி அரச மேஜையில் உட்கார யாரும் மோசமாக இல்லை.<br>2. அனைவரையும் இரட்சிப்பின் ஆசீர்வாதத்திற்குள் கொண்டுவருவதற்கு அன்பினால் ஏவப்பட வேண்டும். |

| | B2 - நிலை 3<br>பாடம் 1 - அற்புதங்கள்<br>தலைப்பு - தண்ணீர் திராட்சைரசமாகிறது | B2 - நிலை 4<br>பாடம் 1 - அற்புதங்கள்<br>தலைப்பு-தண்ணீர் திராட்சைரசமாகிறது |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 2: 1-11**<br>**முக்கிய வசனம்: யோவான் 2: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.கர்த்தராகிய இயேசுவுக்குத் தான் நாம் கீழ்ப்படிய வேண்டும்.<br>2.கர்த்தராகிய இயேசுவை நாம் நம்பும்போதுஇ அவர் நம் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறார். | **தியானப் பகுதி: யோவான் 2: 1-11**<br>**முக்கிய வசனம்: யோவான் 15: 14, 2:5**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நாம் கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிறோம் என்றால்இதிருமணத்தில் வேலைக்காரர்களுக்கு மரியாள் சொன்ன அறிவுரையைக் கேட்க வேண்டும்: ”அவர் உங்களுக்கு என்னச் சொல்லுகிறாரோ அதைச் செய்யுங்கள்”. **(யோவான் 2: 5)** |
| அறிமுகப்படுத்-துங்கள் | கிழக்கு தேசத்து திருமண ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துங்கள்.<br>1ம் வசனத்தில் மரியாள் “இயேசுவின் தாய்” என்று பேசப்படுகிறாள் என்பதை விளக்குங்கள். கர்த்தராகிய இயேசு கன்னி மரியாளின் குமாரன் என்பதால் அவர் பிரபலமானவர் அல்லஇ ஆனால் அவள் கர்த்தருடைய தாயாக இருந்ததால் அவர் நன்கு அறியப்பட்டவர் என்பதை விளக்குங்கள். பைபிள் எப்போதுமே கர்த்தராகிய இயேசுவுக்கு மிக உயர்ந்த இடத்தை அளிக்கிறதுஇ ஆனால் மரியாளுக்கு அல்ல. | அற்புதங்கள் என்றால் என்னஇ அவை ஏன் சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைப் பற்றி விவாதிக்கவும். யோவானின் நற்செய்தி ஏழு அற்புதங்களைச் சுற்றி எழுதப்பட்டுள்ளதுஇ இவை அனைத்தும் பொதுமக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுகின்றனஇ அவற்றில் கலிலேயாவிலுள்ள கானாவூர் கலியாணத்தில் நடந்தது முதலாவதாகும். மற்றவை: பிரபுவின் மகனை குணப்படுத்துதல்; பெதஸ்தா குளத்தில் ஊனமுற்ற மனிதன் சுகமடைந்த விதம்; என்பன. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. நமது இருதயத்துக்குள்இ நமது இல்லங்களுக்குள்இ நமது சமூக வாழ்க்கைக்குள் மற்றும் நமது பள்ளி வாழ்க்கைக்குள் வர கர்த்தராகிய இயேசுவை அழைக்க முடிவு செய்வது எப்படி மிகவும் புத்திசாலித்தனமானதோஇ அதைப்போல கலியாணத்திற்கு அவரை அழைக்க முடிவு செய்தது மிகவும் புத்திசாலித்தனமானது.<br>2. கலியாணத்தின் ஆரம்பத்திலேயே திராட்சைரசம் தீர்ந்துபோனபோது விருந்தினர்கள் ஏமாற்றமடைந்தனர்இ ஆனால் அந்தச் சூழ்நிலையில் அவர்கள் கர்த்தராகிய இயேசுவை உதவிக்காகப் பார்த்தார்கள்.<br>3. முதல்தரமான ரசம் கடைசி வரை வைக்கப்பட்டிருந்தது கிறிஸ்தவ வாழ்க்கை எல்லா நேரத்திலும் சிறப்பாகிறது என்பதை நினைவூட்டுகிறது.<br>4. இந்த அதிசயம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகக் காட்டியதுடனஇ சீடர்களின் விசுவாசத்தை மேலும் பலப்படுத்தியது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கர்த்தராகிய இயேசுஇ அவரது தாய் மற்றும் சீடர்கள் அனைவரும் கலியாணத்தில் விருந்தினர்களாக இருந்தனர்இ அங்கு தண்ணீர் திராட்சைரசமாக மாறியது.<br>2. மரியாள் வேலைக்காரர்களை கர்த்தராகிய இயேசுவிடம் சுட்டிக்காட்டினாள்இ கடைசியாக பதிவுசெய்யப்பட்ட வார்த்தைகளில் வேலைக்காரர்களிடம் கூறுகிறாள்: “அவர் உங்களிடம் என்ன சொல்லுகிறாரோ அதன்படிச் செய்யுங்கள்!” வேறு ஏது மனிதனுக்கும் அல்ல கர்த்தராகிய இயேசுக்கே கீழ்ப்படிய வேண்டும் என்று வழிநடத்துகிறாள்.<br>3. இந்த கலியாணத்தின் முடிவில் சிறந்த திராட்சைரசம் வழங்கப்பட்டதுஇ ஆனால் ஆரம்பத்தில் சிறந்த திராட்சைரசத்தைப் பரிமாறுவது வழக்கமான நடைமுறையாக இருந்தது. |
| மீள்பார்வை செய்யுங்கள் | நிலை 3, B2, இந்தப் பாடம் 1 இல் உள்ள கேள்விகளுக்கு மாணவர்கள் நன்றாக பதிலளிக்க உதவும் வினாடி வினா மூலம் இந்த அதிசயத்தை மீள்பார்வை செய்யவும். | மேலே உள்ள ஒவ்வொரு காரியத்தையும் கிறிஸ்தவ வாழ்க்கையில் பயன்படுத்துவதன் மூலம் பாடத்தை மீள்பார்வை செய்யவும். குறிப்பு:-<br>1.பைபிளில் உள்ள திராட்சைரசம் மகிழ்ச்சியைப் பற்றி பேசுகிறது. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>கர்த்தராகிய இயேசுவை உங்கள் இருதயத்திற்குள் அழைப்பதன் அர்த்தம் என்ன? நாம் கர்த்தருக்குப் பயனுள்ள ஒரு வாழ்க்கையை வாழ எவ்வாறு உதவுவார் என்பதை அறிய **நீதிமொழிகள் 3: 5-6-**ஐ வாசியுங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.நம்முடைய தனிப்பட்ட இரட்சகராக கர்த்தராகிய இயேசுவை நாம் எவ்வாறு நம்புகிறோம் என்பதைக் கவனியுங்கள்.<br>2.நம்முடைய வாழ்க்கைக்கான கர்த்தருடைய சித்தத்தை அறிய தவறாமல் ஜெபிப்பதும் பைபிளைப் படிப்பதும் முக்கியம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். |

| | B2 - நிலை 3<br>பாடம் 2 - அற்புதங்கள்<br>தலைப்பு - சிறுவன் குணமடைந்தான் | B2 - நிலை 4<br>பாடம் 2 - அற்புதங்கள்<br>தலைப்பு - சிறுவன் குணமடைந்தான் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 4: 43-54**<br>**முக்கிய வசனம்: யோவான் 4: 50**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பிரபுவின் மகன் மிகவும் நோய்வாய்ப்பட்டு மரணத்தருவாயிலிருந்தான்இ இயேசுவிடமிருந்து வெகு தொலைவில் இருந்தான்இ ஆனால் இயேசுவால் மீண்டும் குணமடைந்தான்.<br>2.நாம் அனைவரும் பிறவியிலேயே பாவிகள் மேலும் நாம் கர்த்தராகிய இயேசுவிடமிருந்து தூரத்தில் இருக்கிறோம | **தியானப் பகுதி: யோவான் 4: 43-54**<br>**முக்கிய வசனம்: அப் 16: 31; ரோமர் 10: 9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பிரபுவின் மகன் மரணத்தருவாயில் இருந்தான்இ அவனை மீண்டும் உயிர்ப்பிக்க கர்த்தராகிய இயேசுவுக்கு மட்டுமே அதிகாரம் இருந்தது.<br>2. நம்முடைய பாவம் ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்தும் ஒரு நோயாகும், கர்த்தராகிய இயேசு மாத்திரமே நித்திய ஜீவனைக் கொடுக்க முடியும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | கர்த்தராகிய இயேசு தனது முதல் கானாவூர் வருகையின் போதுஇ தண்ணீரை திராட்சைரசமாக மாற்றினார் என்பதையும்இ கானாவூரில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு வல்லமையான அதிசயத்தை மக்கள் காண முடிந்தது - பிரபுவின் மகனைக் குணப்படுத்துதல்இ இவற்றை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். இயேசு கானாவூரில் இருந்ததைக் காட்ட பாடத்தின் வரைபடத்தைப் பயன்படுத்தவும்இ சிறுவன் கப்பர்நகூமில் இருந்தான் இயேசு அங்கே போகவில்லையென்றாலும்இ இயேசுவின் வல்லமை அங்கே உணரப்பட்டது. | கானாவூரில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனது முதல் அற்புதத்தை நிகழ்த்தினார்இ அவருடைய புகழ் பரவியது என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்இ அதைக் கேட்டு ஏரோது அரண்மனையில் ஒரு அதிகாரியான சிறுவனின் தந்தை தாழ்மையுடன் தனது மகனை குணமாக்கும்படி கேட்டார்.<br>இந்தப் பிரபு கர்த்தராகிய இயேசு சிறுவனை குணமாக்க நேரில் வர வேண்டும் என்று நினைத்தார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இந்த சிறுவனின் தந்தை ஒரு யூதர் மேலும் அவர் ஏரோது ராஜாவின் ஒரு அதிகாரி. அவர் மற்ற யூதநாட்டு மக்களை விட கர்த்தராகிய இயேசுவின் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்ததாகத் தெரிகிறதுஇ கர்த்தர் வந்து மோசமாக நோய்வாய்ப்பட்ட தன் மகனைக் குணப்படுத்த வேண்டினார்.<br>2. சிறுவனைக் குணப்படுத்த கர்த்தராகிய இயேசு அவனது படுக்கைக்கு அருகில் இருக்க வேண்டியிருக்கும் என அந்தச் சிறுவனின் தந்தை நினைத்தார்இ ஆனால் கர்த்தர் அவனுடைய மகன் குணமாகிவிட்டான் என்று சொன்னார்இ பிரபு கர்த்தருடைய வார்த்தையை நம்பி வீட்டிற்கு பயணம் செய்யத் தொடங்கினார். எந்த நேரத்தில் சிறுவன் குணமடைந்தான் என்று அவர் ஊழியர்களிடம் கேட்டபோதுஇ அவர்களுடைய பதிலிலிருந்து சிறுவன் குணமாகிவிட்டதாக அவனிடம் கர்த்தராகிய இயேசு உறுதியளித்துச் சொன்ன அதே நேரமாயிருந்தது என்று புரிந்தது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. **நோய்வாய்ப்பட்ட மகனும் தந்தையின் வேண்டுகோளும்.** பணக்காரர் ஏழை என்றில்லாமல் நோயும் மரணமும் நம் அனைவருக்கும் வருகின்றனஇ ஆனால் அனைவரின் ஆவிக்குரிய தேவையைப் பூர்த்தி செய்ய கர்த்தராகிய இயேசு தேவை. கர்த்தராகிய இயேசு பாவத்தை நோயுடன் ஒப்பிடுகிறார் - **மத்தேயு 9: 12-13** ஐப் பார்க்கவும். கர்த்தராகிய இயேசுவை அறிந்தவர்களுக்கு நித்திய ஜீவன் இருப்பதாகவும்இ அவரை அறியாதவர்கள் நித்திய ஜீவனைக் கொண்டிருக்கவில்லை என்றும் பைபிள் கற்பிக்கிறது. **(1 யோவான் 5: 10-14)**<br>2. **கர்த்தரின் பதில்.** கர்த்தராகிய இயேசுஇ உமது மகன் சுகமாயிருக்கிறான் (வசனம் 50) என்று சொன்னபோது பிரபுவின் நம்பிக்கையை சோதித்துக்கொண்டிருந்தார். இப்போதுள்ள மக்களைப் போலவே அன்றிருந்த மக்கள்இ தேவனுடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அடையாளங்களையும் அதிசயங்களையும் (48 வது வசனம்) காண விரும்பினர்: முதலில் விசுவாசம் பின்னர் பார்த்தல்! |
| மீள்பார்வை செய்யுங்கள் | முக்கிய வசனமான **யோவான் 4: 50** ஐக் கற்றுக்கொள்ளுங்கள் கர்த்தர் பிரவுவின் மகனை குணப்படுத்தியதால் அந்த குடும்ம் இயேசுவை ஏற்றுகொண்டது விவரியுங்கள் **(யோவான் 4: 53)** | 'விசுவாசம் இல்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது அசாத்தியம்' **எபிரெயர் 11: 6** ல்- இந்த அறிக்கையை தியானிக்கவும்இ மேலும் இது மாணவர்கள் இப்போது கற்றுக்கொண்டதை எவ்வாறு உள்ளடக்கியிருக்கிறது என்பதை விவாதிக்கவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.நித்திய ஜீவனுக்காக நாம் அனைவரும் கர்த்தராகிய இயேசுவை முழு இருதயத்தோடு நம்பிக் கீழ்ப்படிய வேண்டும்.<br>2. நம் ஜெபத்துக்கு பதில் அளிப்பதர்க்காக அவர் சேரடியாக வரவேண்டியதில்லை | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.உயரிய அந்தஸ்துடைய அந்த நபர் கர்த்தராகிய இயேசுவை நம்பி வீட்டிற்குத் சென்றார் - அவர் தனது நம்பிக்கையைச் செயல்படுத்துகிறார்.<br>வீட்டிலும் பள்ளியிலும் நம்முடைய விசுவாசத்தைச் செயல்படுத்தக்கூடிய வழிகளைப் பற்றி சிந்தியுங்கள். |

| | B2 - நிலை 3<br>பாடம் 3 - அற்புதங்கள்<br>தலைப்பு - குருடன் பார்வையடைகிறான் | B2 - நிலை 4<br>பாடம் 3 - அற்புதங்கள்<br>தலைப்பு - குருடனான பர்த்திமேயு |
|---|---|---|
| | **தியானப் பகுதி: மாற்கு 10: 46-52**<br>**முக்கிய வசனம்: மாற்கு 10: 52**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.பர்த்திமேயுவுக்கு இன்றியமையாத தேவை இருந்ததுஇ தனது தேவையைப் பற்றி அவனுக்குத் தெரியும்இ கர்த்தராகிய இயேசு அவனுடைய தேவையை பூர்த்திசெய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். 2. கர்த்தராகிய இயேசு பர்த்திமேயுவின் ஜெபத்திற்கு பதிலளித்தார் | **தியானப் பகுதி: மாற்கு 10: 46-52**<br>**முக்கிய வசனம்: மாற்கு 10: 52**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பர்த்திமேயுவை **(49 வது வசனம்)** அழைத்ததைப் போலவேஇ கர்த்தராகிய இயேசு நற்செய்தி பிரசங்கத்தின் மூலம் ஆத்மாவில் பார்வையற்றவர்களை அழைக்கிறார். 2. இரட்சிப்புக்காக கர்த்தராகிய இயேசுவை நாம் நம்பும்போதுஇ நம்முடைய பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு அவரைப் பின்பற்ற வேண்டும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | பார்வையற்ற எவரையும் அறிந்திருக்கிறார்களா என மாணவர்களிடம் கேளுங்கள்இ அத்தகைய நபர் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பற்றி பேசுங்கள். பார்வையற்றவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றி விவாதிக்கவும்இ ஆனால் குருட்டை குணப்படுத்த முடியாது. | கர்த்தராகிய இயேசுவின் காலத்தில் பார்வையற்றவர்களுக்கு ஆதரவளிப்பது மிகக் குறைவாக இருந்திருக்கும் என்பதையும்இ உயிர் பிழைப்பதற்காக பலர் பிச்சை எடுக்குமளவிற்கு தாழ்த்தப்பட்டிருந்ததையும் விளக்குங்கள். இன்றைய நிலைமையை வேறுபடுத்திப் பாருங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பார்வையற்ற பர்த்திமேயு என்ற யூதன்இ இயேசுவே மேசியாஇ தாவீதின் மகன் என்று நம்பினான். யூதர்கள் பொதுவாக இதுபோல் அவரை நம்பவில்லை.<br>2. பர்த்திமேயு தனக்கு பார்வையை அளிக்கும்படி விடாமல் மன்றாடினான்இ வானத்தையும் பூமியையும் உருவாக்கியவரும்இ பிரபஞ்சத்தைத் தாங்குகிறவருமான இயேசுஇ பிச்சைக்காரனின் அழுகையில் "அப்படியே நின்றார்" (49 வது வசனம்)இ மேலும் அவனுக்குப் பார்வையைக் கொடுத்தார்!<br>3. இயேசுவின் கடைசி எருசலேம் பயணத்தில்இ அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு அவரை உண்மையாய் தனியாய்ப் பின்பற்றியதன் மூலம் பர்த்திமேயு தனது நன்றியை வெளிப்படுத்தினான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பர்த்திமேயு பார்வையற்றவனாகவும் ஏழையாகவும் இருந்தான்இ நாமும் ஆவிக்குரிய காரியங்களில் பார்வையற்றவர்கள் என்பதை இது நினைவூட்டுகிறதுஇ அதனால்தான் நாம் எங்கு செல்கிறோம் என்று நமக்குத் தெரிவதில்லை. இது கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்க பர்த்திமேயுவுக்கு கடைசி வாய்ப்பாக இருந்திருக்கலாம்இ ஆகவே அவன் கர்த்தரிடம் கெஞ்சிக் கேட்டான்: 'எனக்கு இரங்கும்' **(வசனம் 47)** என்று. இரட்சிப்பு என்பது 'நான்' என்ற வார்த்தையின் பயன்பாட்டின் மூலம் விளக்கப்பட்டுள்ள ஒரு தனிப்பட்ட காரியம். பர்த்திமேயு கர்த்தராகிய இயேசுவிடம் வர தன்னைத் தடுக்கும் எல்லாவற்றையும் தூக்கி எறிந்தான்இ அவன் கேட்கும்போதே உடனடியாக மன்றாடியபடி அவனுக்குப் பார்வை அளித்தார். அவன் கர்த்தராகிய இயேசுவை 'முதல் பார்வையிலேயே அன்புகூர்ந்து' உடனடியாகப் பின்தொடர்ந்தான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | 51 வது வசனத்தில் பர்த்திமேயு செய்த சிறிய ஜெபத்திற்கு 52 வது வசனத்தில் இயேசு விரைவாக பதில் அளித்தார் என்பதில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும். தம்மிடமிருந்து என்ன வேண்டும் என்று பர்த்திமேயுவிடம் இயேசு கேட்டது போலவே கர்த்தராகிய இயேசுவை நம்புவதற்கும்இ அவரைப் பின்பற்றுவதற்கும் உள்ள அவசரத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம். எப்போதும் நமக்கு தருணம் கிடைக்காது. | மத்தேயு 4: 18-22-ஐத் பாருங்கள்இ தாங்கள் செய்துகொண்டிருந்ததை உடனடியாக விட்டுவிட்டு கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றிய மற்றவர்களைக் கண்டுபிடியுங்கள். கர்த்தராகிய இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களில் என்ன குணங்களை எதிர்பார்க்கிறார் என்பதை அறிய **எபேசியர் 6:10-18** |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. ஒவ்வொருவரும் தங்கள் தனிப்பட்ட தேவைகளைப் பற்றி குறுகியஇ பொருத்தமான ஜெபங்களைச் செய்யச் சொல்லுங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. **யோவான் 8: 12** ஐ வாசித்துஇ கடந்த காலத்தின் இருளை விட்டுவிட்டு "வெளிச்சத்தில் நடத்தல்" என்பதன் அர்த்தம் என்ன என்பதைக் கவனியுங்கள். |

| | B2 - நிலை 3<br>பாடம் 4 - அற்புதங்கள்<br>தலைப்பு - தொழுநோயாளிகள் பத்துபேர் | B2 - நிலை 4<br>பாடம் 4 - அற்புதங்கள்<br>தலைப்பு - தொழுநோயுடன் பத்துபேர் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 17: 11-19**<br>**முக்கிய வசனம்: சங்கீதம் 107: 8**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு மட்டுமே பாவத்திலிருந்து நம்மை சுத்திகரிக்க முடியும்.<br>2. கர்த்தராகிய இயேசுவை அன்போடும் பக்தியோடும் சேவிப்பதன் மூலம் சுத்திகரிக்கப்பட்டவர்கள் தங்கள் நன்றியைக் காட்ட வேண்டும். | **தியானப் பகுதி: லூக்கா 17: 11-19**<br>**முக்கிய வசனம்: எபேசியர் 2: 8-9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.நாம் அனைவரும் பாவிகளாக பிறந்தோம்இ பாவ நோயை கர்த்தராகிய இயேசுவால் மட்டுமே குணப்படுத்த முடியும்.<br>2. அவரிடமிருந்து நாம் பெறும் எல்லா நன்மைகளுக்காகவும் தொடர்ந்து அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | தொழுநோய் என்பது ஒரு தோல் நோய் என்பதை விளக்குங்கள்இ இது உலகில் ஏராளமான மக்களை இன்னும் பாதிக்கிறது.<br><br>**லேவியராகமம் 13: 45-46** ஐ குறிப்பிட்டு அதை விளக்குங்கள்இ<br>தொழுநோயாளிகள் மோசேயின் காலத்தில் அசுத்தமானவர்களாகக் கருதப்பட்டனர்இ தனிமையில் வாழ வேண்டியிருந்தது. | தொழுநோய் மிகவும் தொற்றுகின்ற தோல் நோய் என்பதை விளக்குங்கள்இ இது இன்றும் உலகில் உள்ளது. 20 மில்லியன் மக்களுக்கு இந்த நோய் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சிலர் ‘தொழுநோய் மிஷன்’ பற்றி கேள்விப்பட்டிருக்கலாம் - இந்த நோய் உள்ளவர்களுக்கு உதவ ஒரு அமைப்பு உள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிற நபர்களை பைபிளில் பார்க்கவும்.<br>**லேவியராகமம் 13: 45-46** ஐயும் காண்க. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தொழுநோயாளிகள் மக்களுடன் கலந்திருக்க அனுமதிக்கப்படவில்லைஇ எனவே அவர்கள் தூரத்திலிருந்து கர்த்தராகிய இயேசுவிடம் மனமிரங்கும் என அழுதனர்.<br>2. கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து தொழுநோயாளிகள் ஆசாரியரின் வீட்டை நோக்கி புறப்படத் தொடங்கினர்இ வீட்டை அடைந்ததும் அவர்கள் தொழுநோயிலிருந்து குணமடைந்தார்கள்.<br>4. ஆசாரியர்கள்தான் அவர்களைத் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குத் திரும்ப அனுமதி அளித்தனர்.<br>5. ஆசாரியர்கள்தான் அவர்களைத் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குத் திரும்ப அனுமதி அளித்தனர்.<br>6. ஆசாரியர்கள்தான் அவர்களைத் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குத் திரும்ப அனுமதி அளித்தனர். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தொழுநோயாளிகள் தங்களைத் தாங்களே குணப்படுத்த முடியவில்லைஇ ஆனால் சரியான நபராகிய கர்த்தராகிய இயேசுவிடம் வந்தார்கள். **(வசனம் 13)**<br>2. கர்த்தர் ‘போங்கள்’ (வசனம் 14) என்று சொன்னபோதுஇ தொழுநோயாளிகள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்துஇ ஆசாரியர்களின் வீட்டிற்குச் செல்லும் வழியில் குணமடைந்தார்கள். கர்த்தர் சொன்ன வார்த்தையில் வைத்த எளிய விசுவாசம்இ மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை சுத்திகரிப்பைக் கொண்டுவந்தன.<br>3. சமாரியனான ஒரு தொழுநோயாளி மட்டும்இ குணப்படுத்திய வரத்திற்காக தாழ்மையுடன் கர்த்தராகிய இயேசுவுக்கு நன்றி செலுத்துவதற்கும் வணங்குவதற்கும் திரும்பி வந்தான் **(வசனம் 16).** |
| மீள்பார்வை செய்யுங்கள் | கர்த்தராகிய இயேசுவிடமிருந்து தொலைவில் உள்ள பாவியின் சித்திரமே தொழுநோய் என்பதைச் சுட்டிக்காட்டி பாடத்தை மீள்பார்வை செய்யவும். | இந்த பாடத்தை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக மாணவர்களிடம் வினா எழுப்புங்கள்இ மற்றும் பைபிள் டைம் ஆராய்ச்சிக்கு பதிலளிக்க தயாராக்குங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. 1 யோவான் 1: 7 மற்றும் அதன் பொருத்தத்தை கவனியுங்கள்.<br>2. கிறிஸ்தவர்கள் தங்களுக்காக மரித்த கர்த்தராகிய இயேசுவுக்கு நன்றி சொல்ல வேண்டும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. மாணவர்கள் அந்த ஒன்பதுபேரைப் போன்றவர்களா அல்லது அந்த ஒருவனைப் போன்றவர்களா என்பதைக் கவனியுங்கள்.<br>2.நன்றி செலுத்துவதன் அர்த்தம் என்னஇ அது நம் வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும். |

| | B3 - நிலை 3<br>பாடம் 1 - பெத்தானியா<br>தலைப்பு - இரண்டு சகோதரிகள் | B3 - நிலை 4<br>பாடம் 1 - பெத்தானியா<br>தலைப்பு - வீட்டில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 10: 38-42**<br>**முக்கிய வசனம்: லூக்கா 10: 42**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கா்த்தராகிய இயேசு நம்முடைய சேவையைவிட அவா்மீது நமக்குள்ள பாசத்தை மதிக்கிறாா்.<br>2. ஜெப வாழ்க்கை மற்றும் தேவனுடைய வாா்த்தையைப் படிப்பதிலும் நேரம் செலவழிப்பதிலும் நமது வீட்டு கடமைகள்இ அல்லது பள்ளி கடமைகள்இ தலையிட அனுமதிக்கக்கூடாது. | **தியானப் பகுதி: லூக்கா 10: 38-42**<br>**முக்கிய வசனம்: மாற்கு 6: 31**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கிறிஸ்தவா்களாக முதிா்ச்சியடைய நாம் தேவனுடைய வாா்த்தையைப் படிக்க அவசர வாழ்க்கையிலிருந்து நேரத்தை ஒதுக்க வேண்டும், அப்பொழுது தேவன் நமக்கு என்ன சொல்கிறாா் என்பதைக் கேட்க முடியும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | நமது வீடுகளில் முக்கியமான ஒருவா் வந்திருப்பது எவ்வளவு சிறப்பானது என்று கற்பனைசெய்யும்படி மாணவா்களிடம் கூறுங்கள். இயேசு சந்தித்த வீடுகளில் மரியாள் மற்றும் மாா்த்தாவின் வீடும் ஒன்றாகும்.<br>இயேசு சந்தித்த வேறு சில வீடுகளைப் பற்றி சிந்திக்க எல்லோரையும் ஊக்குவியுங்கள்:<br>லூக்கா 4: 38இலூக்கா 7: 37இ லூக்கா 8:51இ லூக்கா 19: 5.<br>நமது வீடுகள் கா்த்தரை கனப்படுத்தும் மற்றும் அவருக்குக் கீழ்ப்படியும் இடங்களாக இருக்க வேண்டும். | மரியாளும் மாா்த்தாளும் இயேசுவை நேசித்தாா்கள் என்பதை விளக்குங்கள். இந்த சந்தா்ப்பத்தில் அவா்கள் இருவரும் அவருக்குச் சேவை செய்வதில் ஈடுபட்டனா். மிகவும் மும்மரமாக இருப்பதால் தான் உண்மையில் வந்த விருந்தினரை அசட்டை செய்கிறோம் என்பதை மாா்த்தாள் உணரவில்லை - கா்த்தராகிய இயேசுவை புறக்கணித்துஇ அவரிடம் சொல்வதற்கும் அவரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும் அவளுக்கு நேரம் இல்லை. |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மாா்த்தா 'வீட்டுவேலை செய்பவள்' மரியாளோ 'ஆராதனை செய்பவள்'இ வேலையும் ஆராதனையும் இணைந்தே செல்ல வேண்டும். ஆராதனையின் அா்த்தத்தைப் பற்றி விவாதிக்கவும்.<br>2. மாா்த்தாள் பலவகையான உணவுகளுடன் கா்த்தருக்கு மரியாதை செலுத்த விரும்பினாள். இயேசு சொன்னாா்: 'தேவையானது ஒன்றே'இ அதாவது ஒரு உணவு போதுமானதாக இருந்தது. அவா்களுடைய ஐக்கியத்தில் அவா் அதிக ஆா்வம் காட்டினாா்இ மரியாவைப் பற்றி 'நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்' என்று கூறினாா். (வசனம் 42) நம்முடைய உடல் உணவை விட ஆவிக்குரிய வாழ்க்கைக்கான உணவு மிக முக்கியமானதுஇ கா்த்தராகிய மரியாளும் மாா்த்தாளும் அவருடைய வாா்த்தையைக் கேட்பது எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என இயேசு விரும்பினாா். **(1 பேதுரு 2: 2)** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஜெபித்தல் மற்றும் வேதம் வாசித்தல் ஆகியவையே நம்முடைய வாழ்க்கையில் ஆசீா்வாதத்திற்கான இரண்டு முக்கிய அடிப்படை அம்சங்களாக இருக்கிறது என கா்த்தா் நமது கவனத்தை ஈா்க்கிறாா்.<br>2. வீட்டு வேலைகளில் அக்கறை கொண்டிருப்பதாக மாா்த்தாவை இயேசு குறை கூறவில்லைஇ ஆனால் அவளுடைய முன்னுரிமை சரியாக இல்லாததால் அவளை மெதுவாக திருத்தினாா்.<br>3. அவா்மீது கவனம் செலுத்துவதே அவசியம் என கா்த்தராகிய இயேசு 42 வது வசனத்தில் சுட்டிக்காட்டுகிறாா். நாம் அவா் மீது வைத்திருக்கும் அன்பைக்காட்டிலும் நம்முடைய சேவைக்கு அதிக பிரதிபலனளிக்கிறாா். நாம் 'மாா்த்தாளாக' இருப்பதிலிருந்து 'மரியாளாக'ஆக மாற வேண்டும் என்று கா்த்தா் விரும்புகிறாா். |
| **மீள்பாா்வை செய்யுங்கள்** | மரியாள் 'இயேசுவின் பாதத்தில் அமா்ந்தாள்' என்பது அருமையானது. **(வசனம் 39)** தாழ்மையும் கீழ்ப்படிதலுமுள்ள இந்த நிலையை எடுத்ததன் மூலம் மரியாள் கா்த்தராகிய இயேசுவுக்கு அளிக்க வேண்டிய கனத்தையும் மரியாதையையும் அளித்தாள். | இதைக் காண்பிப்பதன் மூலம் இந்த ஆராய்ச்சியை மீள்பாா்வை செய்ய முக்கிய வசனத்தைப் பயன்படுத்தவும்:<br>1.கா்த்தராகிய இயேசுவைக் கேட்க சரியான நேரம் இருக்கிறது. (மாற்கு 6: 31) |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நமது ஆராதனையையும் அன்றாட வாழ்க்கையில் வேலையையும் சமநிலைப்படுத்த?<br>2. அவருக்கு கனத்தையும் மகிழ்ச்சியையும் தரும் வகையில் வாழ? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நம்முடைய ஜெப நேரங்களுக்கும் வேத வாசிப்பிற்கும் தினசரி முன்னுரிமை கொடுப்பதன் மூலம் நம் நேரத்தை சமநிலைப்படுத்துவதை உறுதிசெய்வது?<br>2. கா்த்தராகிய இயேசுவுக்கான நம்முடைய சேவை பக்தியற்றதாக இருக்கக்கூடாது |

| | B3 - நிலை 3<br>பாடம் 2 - பெத்தானியா<br>தலைப்பு - துக்கம் மகிழ்ச்சியாய் மாறிற்று | B3 - நிலை 4<br>பாடம் 2 - பெத்தானியா<br>தலைப்பு - கல்லறையருகே |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 11: 1-7, 17-44**<br>**முக்கிய வசனம்: யோவான் 11: 25**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு மட்டுமே மரித்தவர்களை மீண்டும் உயிர்த்தெழச்செய்ய முடியும்.<br>2. கர்த்தராகிய இயேசு மட்டுமே பாவிகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியும், அப்போஸ்தலன் பவுல் இவ்வாறு விவரிக்கிறார்: 'அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர்கள்'. **(எபேசியர் 2: 1)** | **தியானப் பகுதி: யோவான் 11: 1-44**<br>**முக்கிய வசனம்: யோவான் 11: 25-26**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசுவால் லாசருவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பியது மரணத்தின் மீதான அவருடைய வல்லமையின் இன்றியமையாத வெளிப்பாடாகும், உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒரு முக்கியமான நம்பிக்கையாகும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | இயேசு செய்த சில அற்புதங்களை நினைகூரும்படி மாணவர்களைக் கேளுங்கள், எந்த அற்புதத்தை மிகப் பெரியதாகக் கருதலாம் என்று விவாதிக்கவும். கர்த்தராகிய இயேசுவின் பொது ஊழியத்தில் இதுவே கடைசி அற்புதம். கர்த்தராகிய இயேசு லாசருவை ஏன் இறக்க அனுமதித்தார் என்று யூதர்களில் சிலர் கேள்வி எழுப்பினர், ஏனெனில் குருடனை குணமாக்க முடிந்த அவருக்கு இறக்காமலிருக்கச் செய்திருக்க முடியும், **(வசனம் 37)** | லாசருவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்புவது, யோவானின் நற்செய்தியில் ஏழு அற்புதங்களில் கடைசி, அது அவர் தேவனுடைய குமாரன் என்ற உண்மையை யூதர்கள் பலருக்கு உணர்த்திற்று, அவர்கள் அவரை நம்பினார்கள் என்பதை விளக்கி இந்த ஆராய்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பெத்தானியாவிலிருந்த மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோரின் வீடு இயேசு இருக்க விரும்பிய வீடுகளில் ஒன்றாகும். கர்த்தராகிய இயேசு தங்கள் வீடுகளில் ∴ இதயங்களில் ∴ வாழ்க்கையில் இருக்கிறாரா என்று மாணவர்களிடம் கேட்கலாம். **வெளிப்படுத்துதல் 3: 20.**<br>2. கர்த்தராகிய இயேசு லாசருவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்ததைப் போலவே, ஆவிக்குரிய ரீதியில் மரித்தவர்களுக்கு என்றென்றும் நிலைத்திருக்க புதிய ஆவிக்குரிய வாழ்க்கையைத் தரமுடியும்.<br>3. கர்த்தராகிய இயேசு ஒரு இரக்கமுள்ள இரட்சகர் என்பதை இந்தக் கதை நமக்குக் காட்டுகிறது; 'இயேசு அழுதார்' (வசனம் 35) லாசருவை இயேசு எவ்வளவு நேசித்தார் என்பதைஅன்றைய யூத மக்கள் காண முடிந்தது. (வசனம் 36) அவர்களையும் அவர் நேசித்தார், ஆனால் அவர்களில் பலர் அதைப் புரிந்துகொள்ளவில்லை.<br>4. இயேசு கல்லறையிலிருந்து லாசருவை அழைத்தபோது,அவனுக்கு புதிய வாழ்க்கை கிடைத்தது; அவன் கல்லறை துணிகளிலிருந்து 'கட்டவிழ்க்கப்பட்டான்' **(வசனம் 44)** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசுவின் அற்புதங்களைக் கண்டிருந்ததால் மரியாளும் மார்த்தாளும் தங்கள் சகோதரன் மரித்தபோது உதவிசெய்யும்படி இயேசுவை நாடினர்.<br>2. இயேசு இந்த குடும்பத்தை நேசித்தார், ஆனால் அவர்களின் மன்றாட்டுக்கு உடனடியாக பதிலளிக்கவில்லை. லாசரு மரித்ததால் மரணத்தின் மீதான இயேசுவின் வல்லமை அவருடைய சீடர்களுக்கும், மற்ற யூதர்களுக்கும் காட்டப்பட்டது.<br>3. லாசருவின் இழப்பை உணர்ந்ததால் இயேசு அழுதார்.<br>4. இயேசு ஒரு மரித்த மனிதனிடம் பேசினார், அவன் கேட்டான், பதிலளித்தான்! |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | 1.லாசருவுக்கு புதிய ஜீவன் கொடுக்கப்பட்டதைப் போலவே **(44-45 வசனங்கள்)** கர்த்தராகிய இயேசுவை நம்புகிறவர்களுக்கும் புதிய ஜீவன் கொடுக்கப்படுகிறது. க இயேசு பாவிகளுக்கு 'புதிய ஜீவனை' எவ்வாறு கொடுக்க முடியும் என்று அறிய கொலோ 2: 13, 2தீமோ 1: 10. | நம்முடைய வாழ்வில் சோதனைகளை ஒப்பிட்டுவதன் மூலம் ஆராய்ச்சியை மீள்பார்வைசெய்து, கர்த்தராகிய இயேசு ஒரு மோசமான சூழ்நிலையிலிருந்து எவ்வாறு நல்லதை கொண்டுவர முடியும் என்பதைக் காட்டுங்கள். ரோமர் 8: 28 ஐப் பார்க்கவும். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.தனிப்பட்ட மனந்திரும்புதல் மற்றும் 'வாழ்க்கையின் மனது புதிதாகிய நிலையில் நடக்க' கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவதில்? **(ரோமர் 6: 4)** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வாழ்க்கை இருக்கிறது, மரணம் அதை வெல்லவோ குறைக்கவோ முடியாது. இந்த உறுதியே நம்மை கர்த்தராகிய இயேசுவுக்காக வாழ விரும்புகிறவர்களாக ஏவ வேண்டும். **பிலிப்பியர் 1: 21-23.** |

| | B3 - நிலை 3<br>பாடம் 3 - பெத்தானியா<br>தலைப்பு - இன்னுமொரு வருகை | B3 - நிலை 4<br>பாடம் 3 - பெத்தானியா<br>தலைப்பு - பந்தியில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 12: 1-11**<br>**முக்கிய வசனம்: 1 யோவான் 4: 19**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசுவை நாம் உண்மையிலேயே நேசிக்கும்போது, அவருக்கு நன்றி செலுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்போம்.<br>2. கர்த்தராகிய இயேசுவுக்காக நம்மால் முடிந்ததைச் செய்ய நாம் ஒருபோதும் தாமதிக்கக்கூடாது. | **தியானப் பகுதி: யோவான் 11:55-57; 12:1-11**<br>**முக்கிய வசனம்: சங்கீதம் 95: 6**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்க மிகவும் மதிப்புமிக்க எதுவும் இல்லை. அவர் நம்மிடமுள்ள மிகச் சிறந்ததைப் பெற தகுதியானவர்!<br>2. கர்த்தராகிய இயேசுவை நாம் நேசித்தால், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர் நமக்குக் கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்போம். |
| அறிமுகப்படுத்-துங்கள் | **கர்த்தராகிய இயேசுவுக்கு பெத்தானியா எப்படி சிறப்பு** நினைவுகளின் இடமாக இருந்தது என்பதை விளக்குங்கள். மரியாள் மற்றும் மார்த்தாளின் வீட்டில், கர்த்தராகிய இயேசு ஆராதனையின் முக்கியத்துவத்தை கற்பித்தார் என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.<br>இந்தப் பாடம் 2-ல், லாசருவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தபோது, இயேசு தாமே ‘உயிர்த்தெழுதல்’ என்று காட்டினார். இந்த பாடத்தில் கர்த்தராகிய இயேசு இந்த பெத்தானியா வீட்டில் ஒரு விருந்தில் இருக்கிறார். | **யோவான் 12: 1-11**-ல் உள்ள இந்த சம்பவம் பொதுவாக **மாற்கு 14: 3-9**-ல் நடந்ததைப் போலவே கருதப்படுகிறது. மிகவும் விலையுயர்ந்த வாசனை திரவியத்தால் அவரது பாதங்களை மரியாள் அபிஷேகம் செய்வதில் காணப்பட்ட தன்னலமற்ற ஆராதனைக்காக கர்த்தராகிய இயேசு அவளைப் புகழ்ந்தார். மரித்தவர்களை அடக்கம் செய்வதில் வாசனை திரவியங்கள் மற்றும் நறுமணப் பொருட்கள் முக்கிய பங்கு வகித்தன - **ஆதியாகமம் 50: 2-3** ஐ வாசியுங்கள் |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோருக்கு கர்த்தராகிய இயேசுவின் கூட்டாளியாக இருப்பதற்கும், கூட உணவு உண்ணுவதற்கும், அவருடன் நட்பை அனுபவிப்பதற்கும் வழங்கப்பட்ட பாக்கியம். **(வசனம் 2)**<br>2. கர்த்தராகிய இயேசுவின் பாதங்களை விலையுயர்ந்த தைலத்தால் அபிஷேகம் செய்வதற்கும், அவளுடைய தலைமுடியால் அவற்றைக் கழுவுவதற்கும் மரியாளுக்கு வழங்கப்பட்ட பாக்கியம் (வசனம் 3), அவருக்குக் கொடுக்க மிகவும் மதிப்புமிக்கது எதுவுமில்லை என்பதையும், நம்மிடமுள்ள மிகச் சிறந்ததை பெற அவர் தகுதியானவர் என்பதையும் காட்டுகிறது.<br>3. அத்தைலத்தை விற்றுப் பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருக்க வேண்டும் (5 வது வசனம்) என்று யூதாஸ் குறைகூறியபோது, இரக்கம் காட்டவேண்டிய ஏழை மக்கள் உலகில் எப்போதும் அவர்களுக்கு இருப்பார்கள் என்று கர்த்தராகிய இயேசு நினைவுபடுத்தினார். எனினும், கர்த்தராகிய இயேசுவுக்காக இந்தத் தைலத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கும், ஏனெனில் அவர் பாவிகளுக்காக சிலுவையில் மரிக்கச் செல்கிறார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. 1.**வீடு** - பெத்தானியாயில் உள்ள வீடு **(வசனம் 1)** (1) சேவை மற்றும் உபதேசத்தின் இடமாக (2) ஆராதனை மற்றும் ஒற்றுமையின் இடமாக ; மேலும் (3) மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் இடமாக இருந்தது என்ற உண்மைகளை மீள்பார்வை செய்யவும்.<br>2. **விருந்து (வசனம் 2)** ‘அவருக்காக.’ மரியாளும் மார்த்தாளும் லாசரும் அவரை முக்கிய விருந்தினராக சந்திக்க எல்லா காரணங்களும் இருந்தன.<br>3. **அபிஷேகம் (3 வது வசனம்)** மரியாள் கர்த்தராகிய இயேசுவை நேசித்ததைக் காட்டியது, அன்பு தியாகத்தால் அளவிடப்படுகிறது.<br>4. பாராட்டு (7-9 வசனம்) இதுவரை வழங்கப்பட்டதில் இது மிக உயர்ந்தது, இந்த ஆராதனைச் செயல் வரலாற்றில் தொடர்ந்து கூறப்படும் என்று இயேசு சுட்டிக்காட்டினார் - **மத்தேயு 26: 13** ஐ வாசியுங்கள். |
| மீள்பார்வை செய்யுங்கள் | இதே கதை மாற்கு 14: 3-9-ல் கூறப்பட்டுள்ளது. தனது கால்களை அபிஷேகம் செய்த இந்த பெண்மணியைப் பற்றி கர்த்தர் என்ன சொன்னார் என்பதை அறிய 8 வது வசனத்தைப் வாசியுங்கள். இந்த கதையைப் பற்றி | இந்த ஆராய்ச்சியை மீள்பார்வை செய்யும் போது மாணவர்களிடம் கேள்விகளைக் கேளுங்கள், இது ஆராய்ச்சி 3 இல் கேட்கப்படும் கேள்விகளுக்கு அறிவுசார் பதில்களை அளிக்க உதவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவிடம் நீங்கள் காட்டும் அன்பு மற்றவர்களிடம் எவ்வாறு செல்வாக்கு பெறும்?<br>2. யூதர்களில் பலர் கர்த்தராகிய இயேசுவை நம்பினார்கள் **(வசனம் 11)** லாசருவின் புதிய வாழ்க்கையில் அவருடைய வல்லமை நிரூபிக்கப்பட்டது. | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. வீடு - மேலே எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கர்த்தராகிய இயேசு எந்த வகையிலாவது நம் வீடுகளில் இருக்கிறாரா?<br>2. விருந்து - ஒரு விசுவாசிக்கு கர்த்தராகிய இயேசு வாழ்க்கையில் முதன்மையானவராய் உள்ளாரா? |

| | B3 - நிலை 3<br>பாடம் 4 - பெத்தானியா<br>தலைப்பு - எருசலேமை நோக்கி | B3 - நிலை 4<br>பாடம் 4 - பெத்தானியா<br>தலைப்பு-எருசலேம் செல்லும் வழியில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 19: 28-44**<br>**முக்கிய வசனம்: யோவான் 1: 12**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இயேசு எருசலேமுக்குள் நுழைகையில், அவருடைய சீடர்கள் பாடி ஆர்ப்பரித்துத் துதித்து, அவர் அவர்களிடையே செய்த எல்லா வல்லமையுள்ள செயல்களுக்காகவும் அவரைப் புகழ்ந்துனர். | **தியானப் பகுதி: லூக்கா 19: 28-41**<br>**முக்கிய வசனம்: யோவான் 1: 12**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நாம் அவருக்கு சொந்தமானால் அவருடைய கனத்துக்காகவும் மகிமைக்காகவும் நம்முடைய விசுவாசம், அன்பு, ஆராதனை, சேவை மற்றும் உடைமைகளைப் பயன்படுத்துவதில் கர்த்தராகிய இயேசு மகிழ்ச்சி அடைகிறார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | "குருத்தோலை ஞாயிறு" தற்செயலாக நடந்ததல்ல என்ற கருத்தை அறிமுகப்படுத்துங்கள். இது பல ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக இருந்தது.<br>கர்த்தராகிய இயேசுவின் வெற்றிகரமான நகர நுழைவு உண்மையில் நடப்பதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது - சகரியா 9: 9 ஐப் பார்க்கவும். | கர்த்தராகிய இயேசு எருசலேமைக் குறித்து அழுதார் என்பதைச் சுட்டிக்காட்டி இந்த ஆராய்ச்சியை அறிமுகப்படுத்துங்கள் (வசனம் 41-42), காரணம் அவர்கள் அவரை மேசியாவாகப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்துவிட்டார்கள், அது அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கும். இப்போது மிகவும் காலம்கடந்துவிட்டது, யூத தேசத்திற்கு எதிர்வரும் ஆண்டுகளில் பேரழிவு தரும் விளைவுகளை முன்னறிவித்து கர்த்தராகிய இயேசு எச்சரிக்கிறார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கர்த்தராகிய இயேசு அவர் சிலுவையில் அறையப்பட்ட வாரத்தின் தொடக்கத்தில் வெற்றிகரமாக பிரவேசிக்கிறார் (வசனங்கள் 28-40).<br>2. 2சீடர்கள் துதித்து ஆர்ப்பரிக்கிறார்கள். **(வசனம் 37)** அவர்கள் "பூமியில் சமாதானம்" என்றல்ல, "பரலோகத்தில் சமாதானம்" என்று அழுதார்கள் என்பதை நினைவில் கொள்க, ஏனெனில் கர்த்தராகிய இயேசுவின் மரணமும் அவரின் பரமேறுதலும் "பரலோகத்தில் அமைதியைக" கொண்டுவரும்.<br>3. எருசலேம் மக்கள் தன்னை நிராகரித்ததால் இயேசு அழுகிறார், இப்போது தாமதமாகிவிட்டது - அவர்கள் தங்கள் வாய்ப்பை இழந்துவிட்டார்கள். **(வசனம் 42)**<br>4. 4.அவர்களைச் 'சந்தித்த காலத்தை' **(வசனம் 44)** அவர்கள் அறியாததால் கி.பி 70 இல், ஒரு ரோமானிய ஜெனரலான, டைட்டஸின் கீழ், எருசலேம் மற்றும் அதன் மக்கள் அழிக்கப்படுவர் என்று இயேசு குறிப்பிடுகிறார். இதன் அர்த்தம் என்னவென்றால் கர்த்தர் அவர்களுக்கு இரட்சிப்பை வழங்கினார் ஆனால் அவர்கள் அதை விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. **எருசலேமுக்குள் நுழைதல்** - கர்த்தராகிய இயேசு **சகரியா 9: 9ல்** முன்னுரைத்தது போலவே இரவல் வாங்கிய கழுதைக் குட்டியின்மேல் அமர்ந்து எருசலேமுக்குள் பிரவேசித்தார். இது நடப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறியபோது இயேசு வெற்றிகரமாக பவனிச் சென்றதைக் கண்டவர்கள் இயேசுவை சரியாகக் கண்டார்கள்.<br>2. **எருசலேமுக்குள் நுழைந்த காலம்** - பஸ்கா பண்டிகைக்கு இஸ்ரவேலர் அனைவரும் எருசலேமில் கூடும் காலத்தை இயேசு தேர்ந்தெடுத்தார்.<br>3. **மக்களின் நம்பிக்கைகள்** - ஒரு தேசியத் தலைவராக அவர்கள் எதிர்பார்க்கும் ஒரு ராஜாவைக் கொடுத்ததற்காக மக்கள் தேவனைப் புகழ்ந்தார்கள். இருப்பினும், அவர் ஒரு நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார் என்பதை உணர்ந்தபோது அவர்கள் அவருக்கு எதிராகத் திரும்பினார்கள்.<br>4. **பரிசேயர்களின் பதில் -** இயேசு பகிரங்கமாக கௌரவிக்கப்படுவதை பரிசேயர்கள் எதிர்த்தனா |
| மீள்பார்வை செய்யுங்கள் | கதையைப் பற்றி சிந்தித்து, இன்று தனிப்பட்ட இரட்சகராக கர்த்தராகிய இயேசுவை நம்புவதன் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும். **2 கொரிந்தியர் 6: 2** ஐப் பார்க்கவும் | இந்த ஆராய்ச்சியை இயேசுவின் வாழ்க்கைச் சூழலில் அமைத்து மீள்பார்வை செய்யுங்கள். எருசலேம் மதம் மற்றும் அரசியல் அதிகாரத்தின் மையமாகவும் யூதர்கள் மற்றும் ரோமானிய ஆளுநர்களின் இல்லமாகவும் இருந்தது. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. பாவத்திலிருந்து மனந்திரும்பி, இரட்சிப்புக்காக கர்த்தராகிய இயேசுவை நம்புதல் என்பதன் அர்த்தத்தை கவனியுங்கள்.<br>2.கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களை: 'தேவனுடைய பிள்ளைகள்' என குறிப்பிடுகிறது. | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.வாய்ப்பு இன்னும் வழங்கப்படும்போது அதை ஏற்றுக்கொள்பவர்களுக்கு நித்திய ஜீவன் இன்னும் கிடைக்கிறது. 2. கர்த்தருக்கு நம் வாழ்க்கைத் தேவைப்படும் வழிகளைப் பற்றி சிந்தியுங்கள்.<br>3.கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும் இயேசு நிறைவேறுவார். |

| | B4 - நிலை 3<br>பாடம் 1 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - 'மரித்தல்' | B4 - நிலை 4<br>பாடம் 1 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - அவரது மரணம் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 23: 1-26, 32-46**<br>**முக்கிய வசனம்: லூக்கா 23: 33**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக இயேசு மரித்தார்.<br>2. பரலோகத்திற்குச் செல்வதற்கு நாம் நம்முடைய பாவங்களை விட்டு விலகி கர்த்தராகிய இயேசுவை நம்ப வேண்டும். | **தியானப் பகுதி: லூக்கா 23: 32-56**<br>**முக்கிய வசனம்: யோவான் 15: 13,14**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பரலோகத்திற்குச் செல்ல வேண்டுமானால் நாம் பாவிகள், தேவனுடைய தண்டனை பெற தகுதியானவர்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.<br>2. ஆகவே, கர்த்தராகிய இயேசு பாவமற்றவர் என்றும், நமக்குப் பதிலாக தண்டனையை ஏற்றார் என்றும் நாம் நம்ப வேண்டும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | ஈஸ்டர் பண்டிகையின் முக்கியத்துவம் என்ன என்பதை மாணவர்கள் புரிந்துகொண்டனரா எனக் கேட்டு இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்துங்கள். இந்தப் பாடம் முதல் ஈஸ்டரின் கதையைச் சொல்கிறது என்பதை விளக்குங்கள். எல்லா மக்களும் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதை இந்தப் பாடம் எவ்வாறு காட்டுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும். கர்த்தராகிய இயேசுவின் பக்கவாட்டிலிருந்த ஒரு திருடன் பரலோகத்திற்குச் சென்றான், மற்றொவன் செல்லவில்லை. | கைது, விசாரணைகள் மற்றும் கல்வாரிக்கு நடந்துபோதல் உள்ளிட்ட சிலுவை வரை உள்ள நிகழ்வுகளை சுருக்கமாக விவரிக்கவும். இந்த ஆராய்ச்சி இரட்சிப்பையும் மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பதையும், மனந்திரும்பிய திருடன் பரலோகத்திற்குச் சென்றதையும், மனந்திரும்பாத திருடன் செய்யவில்லை என்பதையும் விவாதிக்கவும். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசுவில் எந்த தவறும் இல்லை எனப் பிலாத்துக்கு தெரிந்தும் மக்களைப் பிரியப்படுத்த அவரை மரண தண்டனைக்கு உட்படுத்தினான். (வசன 1-7, 13-25)<br>2. பிலாத்துவும் ஏரோதுவும் எதிரிகளாக இருந்தபோதிலும், அவர்கள் நண்பர்களாகி, கர்த்தராகிய இயேசுவுக்கு எதிராக இருவரும் ஒரே பக்கத்தில் இருந்தார்கள். (வசனம் 12)<br>3. சிலுவையில் அறையப்பட்ட ஆறு மணி நேரம் (காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை) - நடுவில் இயேசுவும் இருபுறமும் ஒவ்வொரு திருடனும் இருந்தது ஏசாயா 53: 12-ன் நிறைவேறுதலாகும்.<br>4. இரண்டு திருடர்கள் இருந்தனர் (வசனங்கள் 39-43) ஆனால் ஒருவன் மட்டுமே பரதீசுக்குச் சென்றான். வசனம் 43க்கு கவனத்தை ஈர்க்கவும் : 'இன்று' - என்ன வேகம்! "என்னுடன்" - என்ன ஐக்கியம்! 'பரதீசில்' - என்ன மகிழ்ச்சி!<br>5. மூன்று மணிநேர இருள் (44-46 வசனங்கள்) மற்றும் ஆலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது, தேவனிடத்தில் செல்ல கர்த்தராகிய இயேசுவே வழி என்பதைக் காட்டுகிறது **எபிரெயர் 10: 19-20.** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. **ஏசாயா 53: 12 -** (காலை 9 முதல் மாலை 3 மணி வரை) இவ்வசனம் நிறைவேற்றுவதற்காக ஆறு மணிநேரம் சிலுவையில் அறையப்பட்டது.<br>2. மனந்திரும்பிய திருடனின் கதை **(23: 43)** இரட்சிப்பு மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்பதைக் காட்டுகிறது. இந்த மனிதன் பரலோகத்திற்குச் சென்றான், ஆனால் ஞானஸ்நானம் பெறவில்லை, சாக்கிரமெந்துகளில் பங்கெடுக்கவில்லை.<br>3. இரண்டு திருடர்களும் மக்களின் பிரதிநிதிகள் - கர்த்தராகிய இயேசுவை நேசிப்பவர்கள் மற்றும் அவருடைய எதிரிகள்.<br>4. இருளின் மூன்று மணி நேரத்தில், (44-46 வசனங்கள்) இயேசு நம்முடைய பாவங்களின் தண்டனையைச் சுமந்தார், அவருடைய மரணத்தின் மூலம் விசுவாசத்தில் வரும் அனைவருக்கும் தேவனிடம் செல்ல வழித் திறக்கப்பட்டுள்ளது.<br>5. யோசேப்பு ஒரு இரகசிய சீடராக இருந்தாலும், கர்த்தராகிய இயேசுவின் உண்மையான நண்பராக இருந்ததை கர்த்தராகிய இயேசுவுக்கு வழங்கிய கண்ணியமான அடக்கத்தால் நிரூபிக்கப்படுகிறதை கதை காட்டுகிறது (50-56 வசனங்கள்). |
| மீள்பார்வை செய்யுங்கள் | மாணவர்களைப் படிக்கச் சொல்லி பாடத்தை மீள்பார்வை செய்யவும் ஏசாயா 53: 12 இது கர்த்தராகிய இயேசுவின் மரணத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது, பைபிள் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதைக் குறிக்கிறது. | கர்த்தராகிய இயேசுவின் மரணத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஏசாயா 53 ஐப் படிக்கும்படி மாணவர்களைக் கேட்டு பாடத்தை மீள்பார்வை செய்யுங்கள், |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பதை நாம் எவ்வாறு உறுதியாக நம்பலாம்?<br>2. நாம் அனைவரும் எந்தப் பக்கத்தில் இருக்கிறோம் என்ற சவாலை எதிர்கொள்கிறோம். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நாம் அனைவரும் இயேசுவின் நண்பரா அல்லது எதிரியா என்ற சவாலை எதிர்கொள்கிறோம்.<br>2. யோசேப்பைப் போலவே கர்த்தராகிய இயேசுவை நாம் நேசித்தால், அதை நிரூபிப்பதற்கான வழிகளைக் காண்போம். |

| | B4 - நிலை 3<br>பாடம் 2 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - உயிர்த்தெழுதல் | B4 - நிலை 4<br>பாடம் 2 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - அவரது உயிர்த்தெழுதல் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 20: 1-18**<br>**முக்கிய வசனம்: ரோமர் 10: 9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கல்லறையில் அடக்கப்பட்டு மூன்று நாட்கள் கழித்து கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.<br>2. மக்தலேனா மரியாள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் தனது அன்பைக் காட்டினாள். | **தியானப் பகுதி: லூக் 8:1-3, யோ 20:1-18**<br>**முக்கிய வசனம்: ரோமர் 10: 9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு மீண்டும் உயிர்த்தெழுந்தபோது மரணத்தை வென்றார்.<br>2. மக்தலேனா மரியாள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மிகவும் பக்தியோடு பின்பற்றினாள். |
| அறிமுகப்படுத்-துங்கள் | உயிர்த்தெழுதல்' என்பதின் அர்த்தத்தைப் பற்றி விவாதித்து,<br>கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பிய ஏதாவது நபர்களையும் அடையாளம் காண மாணவர்களை கேளுங்கள் (லாசரு - யோவான் 11: 44, யவீருவின் மகள் - லூக்கா 8: 55). உயிர்த்தெழுதலின் வல்லமை இயேசுவுக்கு சொந்தமானது என்பதைக் கவனியுங்கள். | உயிர்த்தெழுதலின் வல்லமை கர்த்தராகிய இயேசுவுக்கு எவ்வாறு சொந்தமானது என்பதைப் பற்றி விவாதிக்கவும், அவர் மரித்தோரிலிருந்து எழுப்பிய ஏதாவது நபர்களையும் அடையாளம் காணவும். (லாசரு- யோவான் 11: 44, யவீருவின் மகள் லூக்கா 8: 55). மேலும், கர்த்தராகிய இயேசுவை நம்பி மரித்தவர்கள் எவ்வாறு உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பதையும் வலியுறுத்துங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மக்தலேனா மரியாள், பேதுரு, யோவான் உயிர்த்தெழுதலுக்கான சான்றான - ஒரு வெற்று கல்லறையைப் பார்த்தார்கள்.<br>2. பேதுருவும் யோவானும் வீட்டிற்குச் சென்றார்கள், ஆனால் மக்தலேனா மரியாள் வைத்திருக்கிற கல்லறைக்கு வெளியே தனிமையில் விழிப்போடிருக்கிறாள்.<br>3. கர்த்தராகிய இயேசு அவளுடைய பக்தியை மெச்சும்விதமாக அவளுக்கு நேரில் தோன்றி, அவர் மீண்டும் பரலோகத்திற்குச் செல்லும்போது, விசுவாசிகளின் இருதயங்களில் தங்கியிருக்க பரிசுத்த ஆவியானவரை அவர் அனுப்புவார் என்பதை விளக்குகிறார்.<br>4. அவள் சென்று சீடர்களிடம் அவர் உயிருடன் இருக்கிறார், மேலும் அவர்கள் அவரைச் கலிலேயாவில் சந்திக்க வேண்டும் என்றுச் சொல்லும்படி அவளை அனுப்புகிறார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மக்தலேனா மரியாள் கர்த்தராகிய இயேசுவுக்கு தனது வாழ்நாளில் ஊழியம் செய்தாள், வெற்று கல்லறைக்கு முதலில் சென்றதன் மூலம் தனது பக்தியை நிரூபித்தாள்.<br>2. மாக்தலேனா மரியாள், பேதுரு மற்றும் யோவான் உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்களைக் கண்டனர், மேலும் கர்த்தரின் உடல் திருடப்பட்டது என்ற வாதத்துக்கு இடமில்லாத வகையில், கர்த்தர் கல்லறையை விட்டு வெளியேறியதைக் காட்டும் விதமாக ஆடைகள் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் நன்றாகவும் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள்.<br>3. கர்த்தராகிய இயேசு மரியாளின் பக்தியை மெச்சும்விதமாக நேரில் தோன்றி, அவர் மீண்டும் பரலோகத்திற்குச் செல்லும்போது,விசுவாசிகளின் இருதயங்களில் வசிப்பதற்கு பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் என்று விளக்கினார்.<br>4. அவர் உயிருடன் இருப்பதாகவும், சீடர்கள் அவரை கலிலேயாவில் சந்திக்க வேண்டும் என்றும் சொல்லும்படி அவளை அவர்களிடத்தில் அனுப்புகிறார். |
| மீள்பார்வை செய்யுங்கள் | கர்த்தராகிய இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலைப் பற்றி புதிய ஏற்பாட்டில் முன்னறிவித்த பின்வரும் குறிப்புகளுடன் இந்த பாடத்தை இணைக்கவும். உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் விவாதிக்கவும். **மத்தேயு 16:21, 17:23, 20:19 1கொ 15:3-4** | இந்த பாடத்தை **1 கொரிந்தியர் 15: 3-8, 12-20** உடன் இணைத்து, 4 வது வசனம் எவ்வாறு **ஏசாயா 53: 9** மற்றும் **சங்கீதம் 16: 9-10** ஆகியவற்றைக் குறிக்கிறது என்பதைக் காட்டுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட இரட்சகராக கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிறார்கள் என்று சொல்வதன் முக்கியத்துவம்.<br>2. அவர்மீதுள்ள அன்பு நம் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்க வேண்டும் என்பதைக் கவனியுங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவோடு தனிப்பட்ட ஐக்கியம் மற்றும் அன்பின் முக்கியத்துவத்தை கவனியுங்கள்.<br>2. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிர்த்தெழுதல் மிக முக்கியமானது, |

| | B4 - நிலை 3<br>பாடம் 3 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - 'விட்டுப்பிரிதல்' | B4 - நிலை 4<br>பாடம் 3 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - அவர் பரமேறுகிறார் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோ 20:19-29; லூக் 24:50-53**<br>**முக்கிய வசனம்: லூக்கா 24: 51**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு நமக்கு ஏதாவது பைபிளின் மூலம் சொல்லும்போது, அதை அப்படியே நம்புவதால் நாம் அவரைப் பிரியப்படுத்துகிறோம்.<br>2. யோவான் நற்செய்தியின் நோக்கம் என்னவென்றால் அதை வாசிப்பவர்கள் விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெறவேண்டும் என்பதே. | **தியானப் பகுதி: லூக்கா 24:45-53; அப் 1:1-12**<br>**முக்கிய வசனம்: லூக்கா 24: 51**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு தம்மைச் சேர்ந்தவர்கள் இந்த பூமியில் தனக்குச் சாட்சிகளாக இருக்க விரும்புகிறார்.<br>2. ஒரு நாள் கர்த்தராகிய இயேசு தனக்குச் சொந்தமானவர்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக மீண்டும் இந்த பூமிக்கு வரப்போகிறார். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | நாம் பார்க்கவோ தொடவோ முடியாத பல காரியங்களை எப்படி நம்புகிறோம் என்பதை தொடர்புடைய உதாரணங்களுடன் விவாதிக்கவும்.<br>கிறிஸ்தவ விசுவாசம் கண்டு அல்ல, காணாமல் தேவனுடைய வார்த்தையையும் கர்த்தராகிய இயேசுவையும் நம்புவதையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குங்கள். | நாம் நேசிப்பவர்கள் பேசும் கடைசி வார்த்தைகளை, குறிப்பாக, இறப்பதற்கு அவர்கள் முன் பேசும் வார்த்தைகளை எவ்வாறு நினைவில் பதிக்கிறோம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். வரலாற்றில் பெரிய மனிதர்கள் மரிக்கும் முன் சொன்ன வாசகங்களில் சிலவற்றைக் கவனியுங்கள். இதைக் கர்த்தராகிய இயேசுவின் கடைசி வார்த்தைகளுடன் தொடர்புபடுத்துங்கள். **(அப்போஸ்தலர் 1: 8-9)** |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு சீடர்களிடம் தரிசனமானதை விவாதிக்கவும் அவர்களுக்கு அவர் கூறிய வார்த்தைகளை கவனியுங்கள்: "உங்களுக்குச் சமாதானம்". **(வசனம் 21)** இதன் விளைவாக இயேசுவின் மரணத்தில் விசுவாசத்தால் நம்பியவர்களுக்கு உண்மையான சமாதானம் கிடைக்கிறது என்பதை விளக்குங்கள்.<br>2. இயேசு விசுவாசமற்ற தோமாவுடன் மென்மையாக நடந்து கொண்டார், தாம் உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று அவனைச் சம்மதிக்கச் செய்தார்.<br>3. விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு வார்த்தைகளால் தோமா பதிலளித்தான்.<br>4. உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பிறகு கர்த்தராகிய இயேசு ஒலிவ மலையிலிருந்து பரலோகத்திற்குப் புறப்பட்டார், அதன் பிறகு சீடர்கள் ஆலயத்திற்குத் திரும்பினர், கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்காகவும், அவர் மீண்டும் வருவதற்கான வாய்ப்பிற்காகவும் தேவனைப் புகழ்ந்து நன்றி தெரிவித்தனர். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. எருசலேமிலும், பாலஸ்தீனத்திலும், உலகம் முழுவதிலும் கர்த்தர் தம்முடைய சாட்சிகளாக இருக்கும்படி சீஷர்களுக்கு கட்டளையிட்டார் **(அப்போஸ்தலர் 1: 8).**<br>2. கர்த்தராகிய இயேசு ஒலிவ மலையிலிருந்து பரலோகத்திற்கு ஏறினார் **(வசனம் 12)** மீண்டும் ஒலிவ மலைக்குத் திரும்ப வருவார். **(சகரியா 14: 4)**<br>3. அனைவரும் காண்கையில் அவர் பரமேறினார். ஒரு நாள் அவர் மீண்டும் தனிப்பட்ட முறையில் திரும்பி வருவார் **(மல்கியா 3: 1)** மற்றும் **(மத்தேயு 24: 30)** பார்க்கவும்.<br>4. அவர் வல்லமையுடனும் மகிமையுடனும் ஒரு மேகத்தில் பரத்துக்கு எடுக்கப்பட்டார், அதுபோலவே வல்லமையுடனும் மகிமையுடனும் வானத்திலிருந்து மேகங்களில் திரும்பி வருவார். **(மத்தேயு 24: 30)** |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | முக்கிய வசனத்தைக் கற்றுக்கொள்ளுங்கள், அது எப்படி இந்தப் பாடத்தை சுருக்கமாகக் கூறுகிறது என்பதை விவாதிக்கவும். பரிசுத்த ஆவியின் வருகையைப் பற்றிய வாக்குறுதியின் நிறைவேறுதலை சீடர்களும் எதிர்பார்க்கிறார்கள். **(லூக்கா 24: 49)** | மேலே உள்ள 1-4 குறிப்புகளைப் பார்த்து, கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு பரலோகத்திற்குச் திரும்பிச் செல்வதை அவர் பூமிக்கு மீண்டும் இரண்டாவதுமுறை வருவதோடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் பாருங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.நாம் கர்த்தராகிய இயேசுவை காணவில்லை என்றாலும் நாம் எவ்வாறு இரட்சிப்புக்காக அவரை நம்பலாம்?<br>2. கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களை அவர் பரலோகத்திற்கு சென்றபிறகு அவருக்காக ஊழியம் செய்ய ஊக்குவித்தார் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவை விசுவாசிகள் அவருக்காக வீட்டிலோ, பள்ளியிலோ, நண்பர்களிடமோ எப்படி சாட்சி கொடுக்க முடியும்?<br>2. உலகின் பிற பகுதிகளில் மிஷனரிகளாக இருப்பதற்காக சொந்த நாட்டை விட்டவர்களைப் பற்றி சிந்தியுங்கள். |

| | B4 - நிலை 3<br>பாடம் 4 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - 'திரும்ப வருகிறார்' | B4 - நிலை 4<br>பாடம் 4 - கர்த்தராகிய இயேசு<br>தலைப்பு - அவரது இரண்டாம் வருகை |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போஸ்தலர் 1: 4; 8-12**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 1: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போதும் சாட்சிசொல்லும்போதும் பரிசுத்த ஆவியின் வல்லமை தேவை.<br>2. பரலோகத்திற்கு ஏறிய கர்த்தராகிய இயேசு, பரலோகத்தில் அவரோடிருக்க ஆயத்தமாய் உள்ளவர்களை அழைத்துச் செல்ல மீண்டும் பூமிக்கு வரப்போகிறார். | **தியானப் பகுதி: யோ 14:1-6; அப் 1: 9-11**<br>**முக்கிய வசனம்: 1 தெசலோ 4: 16-17**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பூமிக்கு கர்த்தரின் இரண்டாவது வருகையின் தேதி அல்லது நேரம் தெரியாவிட்டாலும் அது நிச்சயம் நடக்கும் நிகழ்வாகும்.<br>2. இரண்டாவது வருகையில், கிறிஸ்துவில் மரித்தவர்கள் உயிர்த்தெழுவர், உயிரோடு இருக்கும் கிறிஸ்தவர்களும் பரலோகத்துக்கு எடுத்துகொள்வார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | ஒரு சாட்சியைப் பற்றி பேசுங்கள், உதாரணத்திற்கு ஒரு விபத்தைக் குறித்து, உண்மையில் என்ன நடந்தது என்பதைப் பார்த்திருக்க வேண்டும், கேட்டிருக்க வேண்டும். சீடர்கள் கர்த்தராகிய இயேசுவோடுள்ள தனிப்பட்ட அனுபவத்திலிருந்து பேசுவர். நம்முடைய பாவத்திலிருந்து மனந்திரும்பி, நம்முடைய பாவத்தை நீக்க சிலுவையில் கர்த்தராகிய இயேசு நமக்குச் செய்ததை நம்பும்போது அவருடைய பிள்ளைகளாக மாறுவோம். | ஒரு மனிதனாக கர்த்தர் பூமிக்கு வருவதைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறின என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள், அவ்வாறே அவருடைய இரண்டாவது வருகையைப் பற்றிய அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும். கர்த்தராகிய இயேசுவை நம்புகிறவர்கள் அவருடைய வருகையை எவ்வாறு எதிர்பார்க்க வேண்டும் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். **தீத்து 2: 13** ஐப் பாருங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. முதலில் எருசலேமிலும் பாலஸ்தீன நாட்டிலும் கடைசியாக உலகம் முழுவதும் அவருக்கு சாட்சிகளாய் இருக்கும்படி கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். **(அப்போஸ்தலர் 1: 8)**<br>2. கல்லறைக்கு வந்த பெண்கள் சந்தித்த 'பிரகாசிக்கும் ஆடையணிந்த இருவர்' (லூக்கா 24: 4) அது காலியாக இருப்பதாகவும், கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் சொன்னார்கள். மனித வடிவில் இருந்த அதே தேவதூதர்கள் தான் இப்போது இரண்டாவது வருகையைப் பற்றி சீடர்களிடம் சொல்கிறார்கள். (அப்போஸ்தலர் 1: 10-11)<br>3. அவர் பரலோகத்திற்கு ஏறிப்போனது போலவே திரும்பி வருவார்.<br>4. இரண்டாவது வருகையின் நாள் நமக்குத் தெரியாது, எனவே ஆயத்தமாக இருப்பது அவசியம். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. 'வெள்ளைநிற ஆடையில் இருந்த இரண்டு பேர்' **(அப்போஸ்தலர் 1: 10-11)** கர்த்தர் பூமிக்கு இரண்டாவதுமுறை வருவதைப் பற்றி சீடர்களிடம் சொன்னார்கள். லூக்கா 24: 4-ல் உள்ள அதே தேவதூதர்கள் தான் உயிர்த்தெழுதல் பற்றி கல்லறையில் இருந்த பெண்களிடம் சொன்னார்கள்.<br>2. **யோவான் 14: 3-ல்** உள்ள கர்த்தருடைய வாக்குறுதியை **அப்போஸ்தலர் 1: 11** உடன் ஒப்பிட்டு, வேதவசனங்களின் துல்லியத்தையும் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதியிருப்பதையும் விளக்குங்கள்.<br>3. 1தெசலோனிக்கேயர் 4: 16-17-ஐ வாசித்து, இரண்டாம் வருகைக்கு பவுல் கொண்டிருந்த சிறப்பு நுண்ணறிவை விளக்குங்கள். பின்வருமாறு விளக்குங்கள்: கேட்க ஒரு ஒலி - ஆரவாரமும் எக்காளமும்; பார்க்க ஒரு காட்சி - கர்த்தரையே; உணர ஒரு அதிசயம் - பரலோகத்திற்கு எடுத்தக்கொள்ளப்படுவது; ஆனந்திக்க ஒரு கூட்டம் - 'கர்த்தரை வானில் சந்தித்து'; அனுபவிக்க ஒரு ஆறுதல் - 'என்றென்றும் கர்த்தருடன்'. |
| மீள்பார்வை செய்யுங்கள் | பின்வரும் வசனங்களைக் காட்டி, கர்த்தர் தனது வருகையை 'இரவில் ஒரு திருடன் வருவதுபோல்' என்று எப்படிப் பேசினார் என்பதைக் காட்டுங்கள். அவருடைய வருகைக்காகத் தயாராக இருக்க வேண்டும்.<br>**மத்தேயு 24: 44, லூக்கா 12: 20.** | இரட்சிக்கப்பட்டவர்கள் அவரைச் சந்திக்கத் தயாராக இருப்பவர்களுக்கு இரண்டாவது வருகை எந்த பயமும் இல்லை. அவரைப் பிரியப்படுத்தும் விதத்தில் வாழ வேண்டும். **தீத்து 2: 11-14, 1 யோவான் 3: 2-3** |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தர் இப்போது திரும்பி வந்தால், அவர்கள் பரலோகத்திற்குச் செல்லத் தயாரா என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.<br>2. பரலோகம் செல்ல ஆயத்தப்பட சிறந்த நேரம் எப்போது? **2 கொரிந்தியர் 6: 2** ஐப் பார்க்கவும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. விசுவாசிகள் கர்த்தருடைய வருகையின் போது அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதன் பொருள் என்ன?<br>2. இரண்டாவது வருகையில் அவிசுவாசிகள் கைவிடப்படுவார்கள். |

| | B5 - நிலை 3<br>பாடம் 1 - கர்த்தருடைய ஊழியர்கள்<br>தலைப்பு - தேவனால் ஆயத்தம் | B5 - நிலை 4<br>பாடம் 1 - ஆதி கிறிஸ்தவர்கள்<br>தலைப்பு - ஸ்தேவான் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போ 1: 7-9; 2: 1-13**<br>**முக்கிய வசனம்: யோவான் 14: 16-17**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்ப நாட்களில், உள்ளூரிலும் உலக அளவிலும் நற்செய்தியைப் பிரசங்கிக்க செல்லும்படி அப்போஸ்தலர்களுக்குக் கர்த்தர் கட்டளையிட்டார்.<br>2. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் இருதயங்களில் வசித்தார், | **தியானப் பகுதி: அப்போ 6: 1-15; 7: 54-60**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 6: 8**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. ஸ்தேவானைப் போல திறமைவாய்ந்தவர்களால் தேவனுக்காக உலகை மாற்றமுடிகிறது.<br>2. ஸ்தேவானைப் போன்ற உண்மையான விசுவாசிகள் மட்டுமே நற்செய்தியின் உண்மையை அறிவிக்கத் தீர்மானிக்கிறார்கள். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | இயேசு பரமேறியபின்னும், பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தபோதும், சீஷர்களுக்கு அது எப்படி இருந்திருக்க வேண்டும் என்று மாணவர்களை கற்பனை செய்து பார்க்கச் சொல்லுங்கள்.<br>1. இந்த பூமியில் அவருடைய பரிசுத்த ஆவியின் மூலம் தம்மை விசுவாசித்தவர்கள் மூலம் கர்த்தராகிய இயேசு இப்போது செயலாற்றுகிறார்.<br>2. இந்தப் புத்தகம் கி.பி 60-67ல் எழுதப்பட்டபோது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றும் பரலோகத்தில் இயேசு உயர்த்தப்பட்டது. | உபத்திரவம் என்றால் என்ன என்பதைப் பற்றி விவாதித்து நவீன உதாரணங்களைப் பற்றி சிந்தியுங்கள். கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் மதத் தலைவர்கள் அரசாங்கத்தில் கணிசமான செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள், கிறிஸ்தவர்கள் தங்கள் எதிர்ப்பிற்குத் தயாராக இருந்தனர், ஆனால் எப்போதும் கண்ணியத்துடன் நடந்து கொண்டார்கள். மனிதர்களின் சட்டங்கள் தேவனுடைய சட்டங்களுக்கு முரணாக இல்லாதவரை கிறிஸ்தவர்கள் அன்றைய அரசாங்கத்தை மதித்து கீழ்ப்படிந்தனர். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இந்த புத்தகத்தின் முக்கிய வசனம் அப்போஸ்தலர் 1: 8 மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதும் புவியியல் ரீதியாக நற்செய்தி பரவியதின் அடிப்படையில்தான் வடிவமைக்கப்பட்டுள்ளன:<br>எருசலேமில் சாட்சிகள் - அத்தியாயங்கள் 1-7<br>யூதேயாவில் சாட்சிகள் - அத்தியாயம் 8: 1-4<br>சமாரியாவில் சாட்சிகள் - அத்தியாயம் 8: 5-25<br>உலகில் சாட்சிகள் - அத்தியாயம் 8: 26<br>2. பெந்தெகொஸ்தே நாள் (2: 1) விசுவாசிகளில் நிரந்தரமாக தங்க வந்த பரிசுத்த ஆவியானவர் வந்த நாள் - அவர் தங்க வந்தார். அவர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (2: 4). கர்த்தராகிய இயேசுவை நாம் நம்பும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழ்கிறார், ஆனால் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டுமானால், நாம் பைபிளைப் படித்து, ஜெபத்தில் நேரத்தைச் செலவிட்டு, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும்.<br>3. கர்த்தராகிய இயேசு சிலுவையில் முடித்த தமது பணியில் சரியான அடித்தளத்தை போட்டிருக்கிறார் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் தெளிவாகக் காணப்பட வேண்டிய குணங்களை ஸ்தேவான் கொண்டிருந்தார்: நேர்மையுள்ளவரும் பரிசுத்த ஆவியால் நிறைந்தவரும் விசுவாசமும் வல்லமையும் நிறைந்தவரும் கர்த்தராகிய இயேசுவுக்கு ஊழியம் செய்து ஞானமுள்ளவராய் இருந்தார். (அப்போஸ்தலர் 6: 3,5,8)<br>2. எருசலேமில் அல்லது அதற்கு அருகில் ஜெப ஆலயங்களைக் கொண்டிருந்த யூத சமுதாயத்திலிருந்து ஸ்தேவானின் வல்லமைவாய்ந்த ஊழியத்திற்கு எதிர்ப்பு எழுந்தது.<br>3. ஸ்தேவான் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்திருக்க வேண்டும், ஆனால் தனது கர்த்தரைக் காட்டிக் கொடுப்பதை விட மரிப்பது மேலானது என்றிருந்தார். ‘வானம் திறந்திருக்கக் காண்கிறேன்’ என்று அவர் சாட்சியமளித்தவுடன் (அப்போஸ்தலர் 7: 56) கும்பல் அவரை நகரத்திற்கு வெளியே இழுத்துச் சென்று கல்லெறிந்து கொன்றது. |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | அப்போஸ்தலர் 1: 1-ல் அப்போஸ்தலர் நடபடிகள் எழுதிய எழுத்தாளர், வைத்தியனாகிய லூக்கா ‘இயேசு செய்யவும் கற்பிக்கவும் ஆரம்பித்த அனைத்தையும்’ குறிப்பிட்டு ஆரம்பிக்கிறார். | **விவாதியுங்கள்:**<br>1. 2தீமோத்தேயு 2: 3 - ‘இயேசு கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகனாக தீங்கனுபவி;<br>2. 1பேதுரு 4: 14 - “கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் அவமதிக்கப்பட்டால்.” |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. விசுவாசிகளாகிய நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வசிக்கிறார். ‘ஆவியினால் நிரம்பி இருக்க வேண்டியது’ நமது பொறுப்பு. எபேசியர் 5: 18 -ஐ வாசியுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் வைத்த நம்பிக்கைகளுக்காக ஸ்தேவான் இரத்தசாட்சியாக இருந்ததைப் போல, பல கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். |

| | B5 - நிலை 3<br>பாடம் 2 - கர்த்தருடைய ஊழியர்கள்<br>தலைப்பு - மரிப்பதற்கு ஆயத்தம்! | B5 - நிலை 4<br>பாடம் 2 - ஆதி கிறிஸ்தவர்கள்<br>தலைப்பு - பிலிப்பு |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போ 6: 1-5, 8-15; 7: 54-60**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 5: 44**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பெரிய அதிசயங்கள் மற்றும் அற்புதங்கள் (அப்போஸ்தலர் 6: 8) செய்வதற்கு தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு ஸ்தேவான் சிறிய காரியங்களில் உண்மையுள்ளவராக இருந்தார் - உதாரணமாக பந்தி விசாரிப்பதில் (அப்போஸ்தலர் 6: 2) | **தியானப் பகுதி: அப்போ 6:5; 8:4-17; 8:26-40.**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 8: 35**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பிலிப்பு நற்செய்தியின் வெற்றிகரமான போதகராக இருந்தார், அவர் சமாரியாவில் ஒரு எழுப்புதலை ஏற்படுத்திவிட்டு காசாவுக்குச் செல்லத் தயாராக இருந்தார், தேவையிலிருந்த ஒரு நபருக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தார். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | உங்கள் விசுவாசத்திற்கான துன்புறுத்தல் என்ன என்பதைப் பற்றி சிந்தித்து நவீன உதாரணங்களைக் கொடுங்கள்.<br>ஆரம்பகால கிறிஸ்தவர்கள் அன்றைய அரசாங்கத்திடமிருந்தும் மதத் தலைவர்களிடமிருந்தும் எதிர்ப்பை எதிர்கொண்ட போதிலும் நற்செய்தியுடன் எவ்வாறு முன்னேறினார்கள் என்பதை விளக்குங்கள். | தேவாலய நடபடிகளை கவனிப்பதற்காக அப்போஸ்தலர் 6: 5-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் பிலிப்பும் ஒருவராக இருந்தார். பின்னர் அவர் ஒரு சுவிசேஷகராகி, நற்செய்தியை சமாரியாவிற்கு கொண்டு வந்தார். எத்தியோப்பியாவிலிருந்து ஒரு தேவையுடன் வந்த ஒரு அந்நியனைச் சந்திக்க, பாலைவன நாடான காசாவிற்குச் செல்ல கர்த்தர் அவரை அழைத்தார். அந்த மனிதரின் மனமாற்றம் மற்றும் ஞானஸ்நானம் இரண்டிலும் பிலிப்பைப் பயன்படுத்துவதற்கான நோக்கத்துடன் இருந்தார் |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஸ்தேவான் பரிசுத்த ஆவியால் நிரம்பியவர், நல்ல நேர்மையுள்ளவர்,(அப்போஸ்தலர் 6: 3) விசுவாசம் நிறைந்தவர், வல்லமை (அப்போஸ்தலர் 6: 8) மற்றும் ஞானம் (அப்போஸ்தலர் 6: 10) பெற்று கர்த்தருடைய வேலையில் சுறுசுறுப்பாக இருந்து வாழ்ந்த ஒரு கிறிஸ்தவர் (அப்போஸ்தலர் 6: 8) என்று அவருடைய குணம் விவரிக்கப்படுகிறது.<br>2. யூதத் தலைவர்களால் கர்த்தராகிய இயேசு தவறாக கைது செய்யப்பட்டபோது,யூத தேசம் தொடர்ந்து அவரை நிராகரித்தது மட்டுமல்லாமல், 'நீதிமானை' சிலுவையில் அறைந்ததே அவர்களுடைய இறுதிக் குற்றம் என்பதை ஸ்தேவான் தனது குற்றச்சாட்டின் மூலம் நினைவூட்டி வாதித்தார். (அப்போஸ்தலர் 7: 52)<br>3. (அப்போஸ்தலர் 7: 59) மேலும், அவரைக் கொல்பவர்களுக்காக ஜெபித்து, 'நித்திரையடைந்தார்'. (அப்போஸ்தலர் 7: 60) இங்கே 'நித்திரை' என்ற வார்த்தை கர்த்தர் தனது திருச்சபைக்காக மீண்டும் வரும்வரை 'தூ ங்கிக்கொண்டிருக்கும்' உடலைக் குறிக்கிறது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. எத்தியோப்பியரிடம் சென்று பிரசங்கிக்க வேண்டும் என்ற தேவனுடைய கட்டளைக்கு பிலிப்பு கீழ்ப்படிந்தார்.<br>2. எத்தியோப்பியர் ஆப்பிரிக்காவிலிருந்து எருசலேமுக்கு வழிபடுவதற்காக வந்திருந்தார், ஆனால் நற்செய்தியைப் பற்றிய உண்மையான புரிதல் இல்லாமல் போய்விட்டார். உதவித் தேட அவர் பைபிளை நோக்கித் திரும்புகிறார்.<br>3. கர்த்தரால் நடத்தப்பட்ட பிலிப்பு, சரியான நேரத்தில் வந்து ஏசாயா 53 ஐ அவருக்கு விளக்குகிறார். கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கை மற்றும் மரணம் அனைத்தையும் பற்றி இந்த அத்தியாயம் எப்படி விவரிக்கிறது என்பதை அவர் அவருக்குக் காட்டினார்.<br>4. எத்தியோப்பியர் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தார், உடனடியாக நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார், மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு திரும்பினார். |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | கர்த்தராகிய இயேசு மற்றும் ஸ்தேவான் இருவரும் தங்களை கொலைசெய்தவர்களை மன்னிக்கும்படி வேண்டியதிலும், தங்களுடைய ஆவியை தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுத்ததிலும் இது எவ்வாறு தொடர்புடையது என்பதையும் கலந்துரையாடுங்கள். | இந்த ஆராய்ச்சியை ஏசாயா 53 உடன் இணைக்கவும். இது எவ்வாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம்,உயிர்த்தெழுதல் மற்றும் உயர்த்தப்படுதல் ஆகியவற்றைக் குறித்து மிகச் சரியாக எழுதப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டுங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையாக இருந்த காலங்களில்? 2. இன்று அரசாங்கங்களால் இயற்றப்பட்ட சில சட்டங்கள் திருமறையை எதிர்க்கின்ற சூழ்நிலையில் ஸ்தேவானுடைய பக்தி எவ்வாறு நம்முடைய பக்திக்கு சவால் விடுக்கிறது? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தர் அவருக்காக ஒரு வேலையைச் செய்யும்படி நம்மை அழைக்கும்போது, நாம் கேள்வி கேட்காமல் கீழ்ப்படிகிறோமா? 2. கர்த்தராகிய இயேசுவிடம் மற்றவர்கள் வரும்படி ஒரு நல்ல சாட்சியாக இருக்க முயற்சிப்பதில் ஒரு கிறிஸ்தவராக நாம் எவ்வாறு பொறுப்புடன் வாழ்கிறோம்? |

| | B5 - நிலை 3<br>பாடம் 3 - கர்த்தருடைய ஊழியர்கள்<br>தலைப்பு - கேட்க ஆயத்தம்! | B5 - நிலை 4<br>பாடம் 3 - ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>தலைப்பு - கொர்னேலியு |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போஸ்தலர் 8: 5; 26-40**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 16: 31**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பிலிப்பின் உடனடி மற்றும் கேள்விக்கேட்காத கீழ்ப்படிதலின் விளைவாக எத்தியோப்பியனை தம்மிடம் கொண்டு வர கர்த்தர் அவரைப் பயன்படுத்தினார்.<br>2. எத்தியோப்பியன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததன் விளைவாக வீட்டிற்கு மகிழ்ச்சியோடு சென்றான். | **தியானப் பகுதி: அப்போ 10: 1-8; 23-48**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 10: 43**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நற்செய்தி அனைவருக்கும், யூதருக்கும் புறஜாதியாரும் ஒரே மாதிரியாக இருக்கிறது.<br>2. கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்த முதல் புறஜாதியாரில் கொர்னேலியஸும் அவருடைய குடும்பத்தினரும் அடங்குவர். |
| அறிமுகப்படுத்-துங்கள் | சில நேரங்களில் நாம் என்ன செய்ய எதிர்பார்க்கிறோம் என்பதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றை நாம் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை விளக்குங்கள். சமாரியாவில் கர்த்தருக்காக ஒரு பெரிய ஊழியம் செய்யப்படுவதை பிலிப்பு பார்த்துக் கொண்டிருந்தார் என்பதை விளக்குங்கள். இருப்பினும், பலர் மனமாற்றமடைந்த அந்த இடத்தை விட்டு வெளியேறி காசாவின் பாலைவனப் பகுதிக்குச் செல்லவும், எத்தியோப்பியனாகிய ஒரே ஒரு மனிதனுக்கு மட்டுமே உதவி செய்யும்படி கர்த்தரால் கட்டளையிடப்பட்டார். | யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையிலான நிலைமையை எளிமையாக விளக்குங்கள், பொதுவாக ஒரு யூதருக்கு மிகச் சிறிய தொடர்பே இருக்கும், நிச்சயமாக ஒரு புறஜாதியாரின் வீட்டிற்குப் போகமாட்டார்கள். கொர்நேலியு ஒரு ரோமானிய அதிகாரி ஒரு நூற்றுக்கதிபதி, இவர் செசரியா நகரில் வசித்து வந்தார் மற்றும் அவரது இராணுவ வேலையின் அடிப்படையில் ஒரு முக்கிய மனிதராக இருந்தார். அவர் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்தாலும் அவர் கர்த்தராகிய இயேசுவை அறியவில்லை. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பிலிப்பு எத்தியோப்பியரைச் சந்திக்கும் போது,அவர் ஏசாயா 53: 7-8-ஐ வாசித்துக்கொண்டிருந்தார், கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கை மற்றும் மரணம் பற்றி அவருடன் பேச பிலிப்புக்கு வாய்ப்பு கிடைக்கிறது.<br>2. கர்த்தராகிய இயேசு தன்னுடைய இரட்சகராக சிலுவையில் மரித்தார் என்று ஏசாயா எழுதியிருக்கிறார் என்பதை பிலிப்பிடமிருந்து எத்தியோப்பியர் அறிந்துகொண்டார், அந்த எத்தியோப்பியர் தான் ஒரு பாவி என்பதை உணர்ந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததன் மூலம் தன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.<br>3. எத்தியோப்பியரிடம் ஞானஸ்நானம் பெறும் பாக்கியத்தை பிலிப்பு விளக்கினார், அவர்கள் தண்ணீருக்கு அருகில் வந்தபோது,பிலிப்பு அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அந்த எத்தியோப்பியருடன் பயணிக்கும் ஊழியர்கள் அவர் ஞானஸ்நானம் பெற்றதை பார்த்ததோடு, எத்தியோப்பியர் அந்த நாட்களில் நசரேயனாகிய இயேசு என்று அழைக்கப்பட்ட ஒருவரைப் பின்பற்றுபவராக இருந்ததால் இப்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கொர்நேலியு ஒரு நாள் ஒரு தெளிவான தரிசனம் கண்டார், பிற்பகல் 3 மணியளவில், ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்றி, பேதுருவை அழைத்துவர யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பும்படி சொன்னான்.<br>2. பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்தபோது,அவர் பிரசங்கிப்பதைக் கேட்க மற்றவர்களும் இருந்தார்கள்.<br>3. தேவன் பாரபட்சம் இல்லாதவர் - இரட்சிப்பு யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் உரியது என்று ஆரம்பத்திலேயே பேதுரு கேட்போரிடம் சொன்னார்.<br>4. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி பேதுரு பிரசங்கித்தார், அவர்கள் அவரை நம்பினால் பாவ மன்னிப்பு பெறுவார்கள் என்று சொல்லி முடித்தார்.<br>5. கலந்துகொண்ட அந்த புறஜாதியார் அவ்வாறே செய்தார்கள், கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்ற முதல் புறஜாதியார் அவர்கள்தான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்த பாடத்தை ஏசாயா 53-வுடன் இணைத்து, குறிப்பாக 7 மற்றும் 8 வசனங்களைப் பற்றி விவாதிக்கவும். மயிரக் கத்தரிப்பவர்களுக்கு முன்பாக அமைதியாக இருக்கும் ஆடுகளைப் போல, கர்த்தராகிய இயேசு சிலுவையைச் சகித்தார். | ஒரு புறஜாதியார் வீட்டிற்குள் நுழையும் யூதராக பேதுருவின் நிலையை கவனியுங்கள். புறஜாதியினருக்கு நற்செய்தியைக் கொண்டுசெல்வது பற்றி அவர் எவ்வாறு சிந்தித்திருப்பார் என்பதை அறிய அப்போஸ்தலர் 10: 9-17-ஐ பாருங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவர்கள் மற்றவர்களின் வாழ்க்கையில் உண்மையான ஆசீர்வாதத்தைக் கொண்டு வர முடியும் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இனம், கலாச்சாரம், மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பாவ மன்னிப்பு அனைவருக்கும் கிடைக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்? |

| | B5 - நிலை 3<br>பாடம் 4 - கர்த்தருடைய ஊழியர்கள்<br>தலைப்பு - செல்ல ஆயத்தமானார்கள்! | B5 - நிலை 4<br>பாடம் 4 - ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>தலைப்பு - பர்னபாஸ் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போ 10: 1-20; 24-29; 33-43**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 16: 31**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>கொர்நேலியு ஒரு நல்ல மனிதராக இருந்தபோதிலும், அவர் எவ்வாறு ஒரு கிறிஸ்தவன் ஆக முடியும் என்று அவருக்கு சொல்லிக்கொடுக்க ஒருவர் தேவைப்பட்டது. நற்செய்தி யூதர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உரியது என்று தரிசனத்தின் மூலம் பேதுரு கற்றுக்கொண்டார். | **தியானப் பகுதி: அப்போ 4: 32-37; 9: 26-31;**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 11: 24**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நன்மை செய்வதன் மூலம் நாம் கிறிஸ்தவர்களாக மாற முடியாது.<br>2. கிறிஸ்தவர்கள் நன்மை செய்கிறார்கள், ஏனெனில் 'நன்மைசெய்வது' ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் கனிகளில் ஒன்றாகும். (கலாத்தியர் 5: 22) |
| அறிமுகப்படுத்-துங்கள் | இந்தப் பாடம் கடலோர நகரமான சிசேரியாவில் நடந்தது. கொர்நேலியு அங்கு ஒரு ரோமானிய இராணுவ அதிகாரியாக இருந்தார், மேலும் ஒரு நூற்றுக்கதிபதியாக நூறு பேருக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் உண்மையில் அங்குள்ள இத்தாலிய படைப்பிரிவுகளில் ஒன்றில் இணைக்கப்பட்டிருந்தார். இருப்பினும், அவர் தேவனைத் தேடும் ஒரு மனிதர். அவர் ஒரு புறஜாதியார், ஆனால் இது வரை பேதுரு தனது சக யூதர்களிடம் மட்டுமே நற்செய்தியைக் கொண்டு சென்றிருந்தார். | அப்போஸ்தலர் 4: 36-ல் நாம் முதலில் பர்னபாவுக்கு அறிமுகமாகிறோம். அவருடைய பெயரின் பொருள் "ஊக்குவிக்கும் மகன்". அவர் சைப்ரஸ் தீவில் இருந்து வந்தார், அவர் தனது நிலத்தை விற்று பணத்தை கொண்டுவந்து அப்போஸ்தலர்களிடம் கொடுத்தார் என்று பைபிள் சொல்கிறது. அவர் தனது பெயருக்கு ஏற்ப வாழ்ந்து வந்தார், அவருடைய தாராள மனப்பான்மை அப்போஸ்தலர்களுக்கு ஒரு பெரிய ஊக்கமாக இருந்திருக்கும். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவதூதன் கொர்நேலியுவிடம், தரிசனத்தில், செசரியாவுக்கு தெற்கே உள்ள யோப்பா என்ற பட்டணத்துக்கு ஆட்களை அனுப்பும்படி சொன்னான்.<br>2. மறுநாள், தான் தங்கியிருந்த வீட்டின் மாடியில் ஜெபம் செய்ய சென்ற சீமோன் பேதுருவுக்கு மேற்கூரையில் ஒரு தரிசனம் காணப்பட்டது. நற்செய்தி யூதர்களுக்கு மட்டுமல்ல, புறஜாதியினருக்கும்தான் என்பதை தேவன் பேதுருவுக்கு வெளிப்படுத்தினார். தன்னுடையவர்கள் மற்றும் தனதல்லாதவர்கள் - என இரண்டு பிரிவு மக்களை மட்டுமே தேவன் பார்க்கிறார்!<br>3. பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்தபோது,தேவனுடைய தயவு இஸ்ரவேல் தேசமான யூதர்களுக்கு மட்டுமே என்று தான் நம்பியிருந்ததாகவும் ஆனால், தேவன் மனிதரிடம் பாரபட்சம் காட்டுவதில்லை என்பதை கற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்டார். (அப்போஸ்தலர் 10: 34)<br>4. பேதுரு அங்கு இருந்தவர்களுக்கு 'விசுவாசிக்கிறவர்களுக்கு' இரட்சிப்பு என வலியுறுத்தி நற்செய்தியைப் பிரசங்கித்தார். (அப்போஸ்தலர் 10: 43) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஆரானில் இருந்து சில மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த இடத்துக்கும், ராகேல் தனது மந்தையுடன் வந்துகொண்டிருந்த இடத்துக்கும் யாக்கோபு வழிநடத்தப்பட்டதில் தேவனுடைய வேளை சரியானதாக இருந்தது.<br>2. யாக்கோபு ராகேலை திருமணம் செய்துகொள்ள விரும்பினான், ஆனால் லாபன் அவனது மூத்த சகோதரியான லேயாளை முதலில் திருமணம் செய்து கொள்ளும்படி ஏமாற்றினான். ராகேலை திருமணம் செய்வதற்கு முன்பு அவன் மேலும் 7 ஆண்டுகள் லாபனுக்கு சேவை செய்ய வேண்டியிருந்தது. பின்னர் அவன் மேலும் 7 ஆண்டுகள் பணியாற்ற வேண்டியிருந்தது.<br>3. யாக்கோபு வஞ்சகத்தை விதைத்தான், இப்போது அவன் அதை அறுவடை செய்கிறான்! |
| மீள்பார்வை செய்யுங்கள் | முக்கிய வசனத்தைக் கற்று, அது இன்றையப் பாடத்தை எப்படி சுருக்கமாகக் கூறுகிறது என்று விவாதிக்கவும். யோவான் 3: 15-16-ல் உள்ள 'விசுவாசிக்கிறவன் எவனோ' என்ற சொற்றொடரை மாணவர்களை கவனிக்கச் செய்யவும். | ஆராய்ச்சி 4 இல் உள்ள கேள்விகளுக்கு மாணவர்கள் சரியாக பதிலளிக்கக்கூடிய கேள்விகளைக் கேட்டு ஆராய்ச்சியை மீள்பார்வை செய்யவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. பிற தேசங்களைச் சேர்ந்த இளைஞர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதில்?<br>2. அப்போஸ்தலர் 10: 34 ஐ உங்கள் சொந்த வார்த்தைகளில் விளக்குங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வாழ்வில் 'நன்மையை' நிரூபிக்க?<br>2. கர்த்தருக்கு உண்மையாக கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும்? |

| | B6 - நிலை 3<br>பாடம் 1 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - கனவுக்கார வாலிபன் | B6 - நிலை 4<br>பாடம் 1 - யாக்கோபும் குடும்பமும்<br>தலைப்பு - ஆரானில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 37: 1-11**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 37: 8**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>யோசேப்பு பதின்மூன்று வயதில் ஒரு இளைஞனாக இருந்தபோது, தேவன் அவனுடன் கனவுகளில் பேசினார், அவனுடைய வாழ்க்கைக்கு ஒரு திட்டம் இருப்பதாக அவனுக்கு வெளிப்படுத்தினார். பொறாமை என்னும் பாவம் தேவனுக்கு வெறுப்பைத் தருகிறது, எனவே அது தவிர்க்கப்பட வேண்டும். | **தியானப் பகுதி: ஆதியாகமம் 29: 1-30**<br>**முக்கிய வசனம்: கலாத்தியர் 6: 7**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. எல்லாம் தேவனுடைய முழுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது, அவருடைய நேரம் சரியானது.<br>2. நம் வாழ்வில் பாவச் செயல்களை விதைத்தால், அதன் விளைவுகளை அறுவடை செய்வோம் என்று எதிர்பார்க்கலாம். |
| அறிமுகப்படுத்-துங்கள் | யோசேப்பின் முன்னோடிகளான ஆபிரகாம்,ஈசாக்கு ஆகியோரை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள், இப்போது நாம் யாக்கோபுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் வருகிறோம்.<br>யோசேப்பு யாக்கோபின் மகன்களில் ஒருவன், அவனுடைய தாயின் பெயர் ராகேல். அவன் தொழிலால் ஒரு மேய்ப்பன். அவனுக்கு பெஞ்சமின் என்று ஒரு தம்பி இருந்தான், பெஞ்சமின் பிறந்தபோதுதான் யோசேப்பின் தாய் ராகேல் இறந்தாள். | யாக்கோபின் முன்னோடிகளை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.<br>ஈசாக்கு மற்றும் ரெபெக்காவின் மகன் யாக்கோபு, அவனுடைய சகோதரன்தான் ஏசா.<br>அவன் பெயர்ஷெபாவில் வசித்து வந்தான், மெசொப்பொத்தேமியாவில் உள்ள ஆரானுக்கு தப்பி ஓடினான், ஏனென்றால் ஏசாவின் பிறப்புரிமையை அவன் கொள்ளையடித்ததற்காக அவனைக் கொல்ல திட்டமிட்டிருந்தான். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பல வண்ண அங்கி உண்மையில் ஒரு நீளமான தொங்கலுடைய அங்கியாக இருந்தது, யாக்கோபு யோசேப்பு மீது சிறப்பு பாசம் காட்டினார், ஆனால் அவனது சகோதரர் இருதயங்கள் அவன் மீது எரிச்சல், வெறுப்பு மற்றும் பொறாமை கொண்டன.<br>2. யோசேப்பை அவனது சகோதரர்கள் வெறுத்தார்கள், ஏனென்றால் அவர்கள் செய்த தவறான செயல்களைப் பற்றி யாக்கோபிடம் சொன்னான், அவன் ராகேலின் மகன் என்பதால் யாக்கோபு அவனை அதிகம் நேசித்தார், யாக்கோபுக்கு அவன் வயதான காலத்தில் பிறந்தான்.<br>3. யோசேப்பின் முதல் கனவில், பதினொரு கதிர்கட்டுகள் பன்னிரண்டாவதை வணங்குவது, ஒரு நாள் அவனது சகோதரர்கள் அவனை வணங்குவார்கள் என்பதற்கான ஒரு தீர்க்கதரிசனமாகும். இரண்டாவது கனவு அவனுடைய சகோதரர்களும் யாக்கோபு (சூரியன்) மற்றும் லேயாள் (அவரது வளர்ப்பு தாய்) (சந்திரன்) இறந்துவிட்ட ராகேலும் அவனை வணங்குகிறார்கள் என்ற தீர்க்கதரிசனமாகவும் இருந்தது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பர்னபா தன்னலமற்றவராக இருந்ததால் கர்த்தரின் பக்தியுள்ள ஊழியராக இருந்தார். அவர் தனது நேரத்தையும் உடைமைகளையும் பயன்படுத்தி மற்றவர்களுக்கு உதவினார். அவர் கர்த்தராகிய இயேசுவை மக்கள் அறிந்துகொள்வதைப் பார்க்க விரும்பினார், மேலும் வாழ்க்கையின் அடிப்படை தேவையிலுள்ளவர்களுக்கு உதவ விரும்பினார். இதன் விளைவாக அவர் ‘ஒரு நல்ல மனிதர்’ என்று குறிப்பிடப்படுகிறார். (அப்போஸ்தலர் 11: 24)<br>2. பர்னபா பவுலுக்கு இரக்கம் காட்டினார். எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் பவுலை ஏற்றுக்கொள்ள அஞ்சியபோது (அப்போஸ்தலர் 9: 27) அவர் பவுலுக்காக பரிந்துரைத்தார்.<br>3. அந்தியோகியாவில் உள்ள புதிய சபையை ஊக்குவிப்பதற்காக எருசலேமில் உள்ள திருச்சபையால் பர்னபா அனுப்பப்பட்டார், அவர் அங்கு இருந்தபோது பலர் தேவனிடம் திரும்பினர். அந்தியோகியாவில் உள்ள புதிய கிறிஸ்தவர்களை ‘கர்த்தருக்கு உண்மையாக இருக்க ’ஊக்குவித்தார்.’ (அப்போஸ்தலர் 11: 23) ஒருவேளை புதிய விசுவாசிகளிடம் இத்தகைய ஞானமான வார்த்தைகள் பேசவோர் அன்று அரிதாயிருக்கும்! |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்தப் பாடம் 1 இல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க மாணவர்களுக்கு உதவும் வினாடி வினா கேள்விகள் மூலம் பாடத்தை மீள்பார்வை செய்யவும். | பெயர்ஷெபாவிலிருந்து (மேற்குக் கரையில்) இன்றைய சிரியாவில் இருக்கிற ஆரானுக்கு (யூப்ரடீஸ் நதிக்கரையில்) யாக்கோபு மேற்கொண்ட பயணத்தை மாணவர்கள் மனதில் காண ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>பொறாமை என்னும் பாவம் நம்முடைய வாழ்வில் தவிர்க்கப்பட வேண்டும்; பைபிள் இதை இவ்வாறு குறிப்பிடுகிறது: ‘பாதாளத்திலும் கொடியது’. (உன்னதப்பாட்டு 8: 6) | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம்முடைய பாவத்தைவிட்டு மனந்திரும்பி, இரட்சகரை இரட்சிப்பிற்காக நம்பாவிட்டால், நம்முடைய பாவ வாழ்க்கையின் விளைவுகளை அறுவடை செய்வோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். |

| | B6 - நிலை 3<br>பாடம் 2 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - வெறுக்கப்பட்ட சகோதரன் | B6 - நிலை 4<br>பாடம் 2 - யாக்கோபும் குடும்பமும்<br>தலைப்பு - பெனியேல் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 37: 12-36**<br>**முக்கிய வசனம்: ரோமர் 6: 12**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>பாவம் நம் வாழ்வில் ஒரு சிறிய அளவில் தொடங்குகிறது, நாம் கர்த்தராகிய இயேசுவிடம் அதற்கு மன்னிப்பு கேட்காவிட்டால் அது நம் வாழ்வில் வளர்ந்து நம்மை அடிமைப்படுத்தும். நம்முடைய பாவத்தைப் பற்றி குற்றவுணர்வு ஏற்படும்போது நாம் அதை உடனடியாக கர்த்தராகிய இயேசுவிடம் அறிக்கைசெய்யவேண்டும் | **தியானப் பகுதி: ஆதியாகமம் 32: 1-32**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 32: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>தெய்வீக பாதுகாப்பு தேவை என்ற தீவிர உணர்விலிருந்து யாக்கோபு தேவனிடம் ஜெபம் செய்தார். யாக்கோபு இறுதியாக தனது வாழ்க்கையை தேவனிடம் அளிக்கிறார், தேவனிடம் ஒப்புக்கொண்ட பிறகு "ஏமாற்றுபவன்" என்னும் அர்த்தமுள்ள பெயரை, தேவன் இஸ்ரேவேல் என்று மாற்றினார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | இதுவரை யோசேப்பின் கதையை மீள்பார்வை செய்து, யாக்கோபின் குடும்பத்தில் ஏற்பட்ட பதட்டங்களையும், அதற்கான காரணங்களையும் மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். ஆதியாகமம் 27-ல், ஏசாவிற்கு முன்பே, யாக்கோபு தன் தந்தை ஈசாக்கை ஆட்டின் தோலால் ஏமாற்றி ஆசீர்வதிக்கும்படி செய்தான். இந்தப் பாடத்தில் யாக்கோபின் மகன்கள் ஒரு ஆட்டின் இரத்தத்தால் அவனை ஏமாற்றுகிறார்கள். அவனுடைய மகன்கள் அவனை ஏமாற்றியபோது யாக்கோபு இதை நினைவுகூர்ந்திருப்பான் என்று கருதுவது நியாயமானதே. | முக்கியமான நபர்களுடன் மாணவர்கள் சந்தித்த எந்த சந்திப்புகளையும் பற்றி விவாதிக்கவும். இந்த ஆய்வில் நாம் தேவனுடன் சந்திப்பதைப் பற்றியும் யாக்கோபுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றியும் சிந்திக்கிறோம் என்பதை விளக்குங்கள்.<br>யாக்கோபுடன் மல்யுத்தம் செய்தவர் (வசனம் 24) வேறு யாருமல்ல, கர்த்தரே. எரியும் புதரிலிருந்து கர்த்தர் மோசேக்குத் தோன்றும் இடத்தையும் குறிப்பிடுங்கள்; (யாத்திராகமம் 3: 1-22) |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோசேப்பை ஒரு குழிக்குள் தூக்கி வீசும் அளவிற்கு அவனது சகோதரர்கள் அவன்மீது வெறுப்பாயிருந்தனர்.<br>2. யோசேப்பின் சகோதரர்கள் அவனை எகிப்துக்குச் செல்லும் இஸ்மவேலர்களுக்கு (மீதியானியர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்) இருபது வெள்ளிக்காசுக்கு விற்கிறார்கள்.<br>3. யோசேப்பின் தந்தையான யாக்கோபிடம் அவனது சகோதரர்கள் ஒரு பொய்யைக் கூறுவதால், அவர் மனம் உடைகிறார். அவர்கள் ஒரு ஆட்டின் இரத்தத்தில் நனைத்த துணியை அவருக்குக் காட்டுகிறார்கள், மேலும் தனது மகன் இறந்துவிட்டதாக யாக்கோபு கருதுகிறார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யாக்கோபு ஆரானில் இருந்து கானானுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார், ஏசா ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு சொன்னது போலவே தன்னைக் கொன்றுவிடுவான் என்று அஞ்சினார். (ஆதியாகமம் 27: 41)<br>2. ஏசா 400 பேர்களுடன் வருவதாக யாக்கோபு கேள்விப்பட்டார், எனவே அவர் தனது குடும்பத்தை இரண்டு குழுக்களாகப் பிரித்தார், இதனால் முதலாவது அழிக்கப்பட்டால் இரண்டாவது தப்பி ஓட முடியும்.<br>3. ஏசாவை சமாதானப்படுத்த யாக்கோபு மொத்தம் மூன்று மந்தையை அனுப்புகிறார், மொத்தம் 580 மிருகஜீவன்கள்.<br>4. யாக்கோபு தனியாக இரவை பெனியேலில் (தேவனுடைய முகம்) கழிக்கிறார் - இது அவரது வாழ்க்கையின் மிகப்பெரிய அனுபவம். கர்த்தர் யாக்கோபின் தொடை நரம்பை சுளுக்கச்செய்து, யாக்கோபு என்ற அவனது பெயரை இஸ்ரவேல் என மாற்றுகிறார். |
| மீள்பார்வை செய்யுங்கள் | இஸ்மவேலர்கள்மீது இந்த கதையில் தேவன் எவ்வாறு கட்டுப்பாட்டில் இருந்தார் என்பதைப் பற்றி விவாதிக்கவும். யோசேப்பு எகிப்தில் அதிகாரத்தில் இரண்டாம் இடத்தில் இருக்கப்போகிறான். விவாதிக்கவும் | ஆய்வில் 2ல் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை நிரப்ப மாணவர்களுக்கு உதவும் கேள்விகளைக் கேட்டு இந்த ஆராய்ச்சியை மீள்பார்வை செய்யவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>முக்கிய வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள் ரோமர் 6: 12, மேலும் மாணவர்களை தங்கள் வாழ்க்கையில் இதை ஒரு வழிகாட்டும் கொள்கையாக பின்பற்ற ஊக்குவிக்கவும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>யாக்கோபு தேவனோடு தனியாக இருந்தான். (வசனம் 24) இரட்சிப்பைப் பெறுவதற்கு பாவிகளாகிய நாம் தேவனோடு தனிப்பட்ட முறையில் ஐக்கியம் கொள்ள வேண்டும். பாவங்கள் மன்னிக்கப்பட எல்லோரும் தேவனைச் சந்திக்க வேண்டும்! |

| | B6 - நிலை 3<br>பாடம் 3 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - நேர்மையான கைதி | B6 - நிலை 4<br>பாடம் 3 - யாக்கோபும் குடும்பமும்<br>தலைப்பு - பெத்தேலில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 39: 1-6; 19-23**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 39: 21**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>யோசேப்பு எகிப்தில் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தபோதிலும், மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட அவன் தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். தேவன் யோசேப்பைக் கவனித்தார், அவனுக்கு ஒரு பெரிய எதிர்காலம் இருந்தது. (ரோமர் 8: 28) | **தியானப் பகுதி: ஆதியாகமம் 35: 1-15**<br>**முக்கிய வசனம்: சங்கீதம் 37: 7**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வாழ்விற்காக தேவனுடைய பாதையிலிருந்து அலைந்து திரிந்து போகலாம், ஆனால் அவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை. எதிர்காலத்தில் நாம் சந்திக்கும் சிரமங்களை சமாளிக்க கிறிஸ்தவர்களாகிய நமக்கு உதவி தேவை. |
| அறிமுகப்படுத்-துங்கள் | மக்கள் நிரபராதிகளாக இருக்கும்போது அவர்களை சிறையிலடைக்கும் அநீதியைப் பற்றி விவாதிக்கவும். யோசேப்புக்கு நடந்ததை விளக்குங்கள்.<br>சில நாடுகளில், இன்று, விசுவாசிகள் சிறையில் இருக்கிறார்கள் என்பதை விளக்குங்கள். ஏதோ தவறு செய்ததற்காக அவர்கள் சிறைச்சாலையில் இல்லை, மாறாக உண்மை கிற்ஸதவர்களாக இருக்கிறதினாலே. | தேவனை நம்புகிறவர்கள் அவருடைய பாதுகாப்பில் உறுதியாக இருக்கிறார்கள் - தேவனில் பாதுகாப்பு இருக்கிறது என்ற உண்மையை கவனத்தில் கொண்டு ஆராய்ச்சியை அறிமுகப்படுத்துங்கள்.<br>சங்கீதம் 91 மற்றும் ரோமர் 8 ஆகியவை இந்த பாதுகாப்பை விளக்குகின்றன. பின்வரும் வசனங்களை அறிமுகம்செய்து அதன் பின்னணியைக் குறிப்பிடுங்கள்: சங்கீதம் 91: 2, 15; ரோமர் 8: 31. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்மவேலர்கள் யோசேப்பை பார்வோனின் அரண்மனையின் அதிகாரியான போத்திபருக்கு அடிமையாக விற்றனர்.<br>2. போத்திபரின் மனைவி அவனைப் பற்றி பொய் சொன்னாள், அவன் பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தள்ளப்பட்டான்.<br>3. யோசேப்பு சிறையில் மிகவும் நன்றாக நடந்து கொண்டான், சிறைச்சாலை அதிகாரி அவனை சிறைக்குப் பொறுப்பாக வைத்தான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஆதியாகமம் 28: 20-22-ல் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர் செய்த சத்தியத்தை நிறைவேற்றும்படி தேவன் யாக்கோபுக்கு கட்டளையிடுகிறார், அதன்படி பெத்தேலுக்குத் திரும்புகிறார்.<br>2. யாக்கோபு தன் குடும்பத்தினரை அந்நிய தெய்வங்களை நீக்கிவிட்டு உடைகளை சுத்தம் செய்யும்படி கட்டளையிடுகிறார், அவர்கள் அவ்வாறு செய்யும்போது அவர்கள் புறஜாதியினருக்கு அச்சமாகத் திகழ்ந்தனர்.<br>3. அவர் 'ஏல் பெத்தேலில்' ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார், அவரை ஏசாவிடமிருந்து பாதுகாத்த தேவனை வணங்குகிறார்.<br>4. தேவன் யாக்கோபை மீண்டும் பெத்தேலில் சந்தித்து ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு ஆகியோருடன் செய்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். |
| மீள்பார்வை செய்யுங்கள் | யோசேப்பின் வாழ்க்கைக்கான சாத்தானின் நோக்கத்தை தேவன் எவ்வாறு தோற்கடிக்கிறார் என்பதையும், பொறுப்பான விசுவாசியாக யோசேப்பு இருக்குறாரா என்பது கேட்டு பாடத்தை மீள்பார்வை செய்யவும். | ராகேல் தனது குழந்தைக்கு பெனானி என்று பெயரிட்டாள், அதாவது 'என் துக்கத்தின் மகன்', ஆனால் யாக்கோபு அவனுக்கு பெஞ்சமின் என்று பெயரிட்டார், அதாவது 'என் வலது கையின் மகன்'. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நாம் அவரை நம்பி கீழ்ப்படிந்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை எவ்வாறு மிகக் கடினமான சூழ்நிலைகளில் கூட கவனித்துக்கொள்வார் என்பதைப் பற்றி இந்தப் பாடம் நமக்குக் கற்பித்ததைக் கவனியுங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>ஒரு கிறிஸ்தவராக, நாம் சிரமங்களில் இருக்கும்போது,எபிரெயர் 13: 5ன் பிற்பகுதியைப் பிடித்துக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும், "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." |

| | B6 - நிலை 3<br>பாடம் 4 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - புதிய தலைவர் | B6 - நிலை 4<br>பாடம் 4 - யாக்கோபும் குடும்பமும்<br>தலைப்பு - கானானில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 41: 14-49**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 41: 32**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இரண்டு கனவுகளையும் விளக்கும் திறமைக்கான மகிமையை யோசேப்பு தேவனுக்கே செலுத்தினான், மேலும் இந்த மனத்தாழ்மையின் காரணமாக தேவன் அவனுக்குப் பொறுப்பான பதவியளித்தார்.<br>2. யோசேப்பு தேவனுக்கு உண்மையாக இருந்தான், தேவன் அவனைக் கவனித்தார். | **தியானப் பகுதி: ஆதியாகமம் 37: 1-36**<br>**முக்கிய வசனம்: எபேசியர் 4: 31-32**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பாரபட்சம் பொறாமைக்கு வழிவகுக்கும் மற்றும் பொறாமை மிகவும் கொடிய பாவத்திற்கும் மக்களின் வாழ்க்கையில் கோரமான விளைவுகளுக்கும் வழிவகுக்கும் - பொறாமைகொண்டவருக்கும் மற்றும் அவரால் பாதிக்கப்பட்டவருக்கும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | இதுவரை நடந்த கதையை நினைவுகூரச் செய்து, யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் தனது நோக்கங்களைச் செயல்படுத்திக் கொண்டிருந்தார் என்பதை விளக்குங்கள்.<br>யோசேப்பின் நல்ல சாட்சி காரணமாக, (வசனம் 39) அவன் அதிகாரத்தில் இரண்டாவது நிலையில் பதவி உயர்வு பெற்றான் என்பதை சுட்டிக்காட்டவும். 42 வது வசனத்தில், அவன் ஒரு அடிமையின் நிலையிலிருந்து ஒரு ராஜாவின் மகனின் நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக மோதிரம் காட்டுகிறது; | யாக்கோபின் குடும்பத்தையும் அவர்களின் தற்போதைய சூழ்நிலையையும் அறிமுகப்படுத்துங்கள்.<br>பிற பைபிள் வாசிப்புகளைக் குறிப்பிடுவதன் மூலம் இந்த ஆராய்ச்சிக்கான பின்னணியை அமைக்கவும்: சங்கீதம் 56 - கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, பிசாசு மற்றவர்களை பயன்படுத்தி எப்படியெல்லாம் தாக்கினாலும் தேவன் அவர்களைக் கவனித்து வருகிறார் என்பதைப் பற்றி விவாதிக்கவும். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பார்வோனுக்கு கனவுகள் உள்ளன, கனவை விளக்குவதற்காக யோசேப்பு சிறையிலிருந்து கொண்டு வரப்படுகிறான்.<br>2. யோசேப்பு பார்வோனின் இரண்டு கனவுகளை விளக்குகிறான் -ஏழு ஆண்டுகள் செழிப்பு மற்றும் ஏழு ஆண்டுகள் பஞ்சம். பார்வோன் யோசேப்பை அதிகாரத்தில் இரண்டாவதாக ஆக்குகிறான்,மேலும் யோசேப்பு தானியத்தை கையாளும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறான்.<br>3. செழிப்பான ஆண்டுகளில் விளைந்த தானியம் கணக்கிட்டு எழுதமுடியாத அளவுக்கு மிகுதியாக இருந்தது. ஏழு ஆண்டுகள் பஞ்சம் வந்தது, மிகுதியான தானியம் எகிப்திலும் வெளிநாடுகளிலும் பட்டினியில் வாடிய மக்களுக்கு உதவிற்று. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோசேப்புக்கு கனவுகள் உண்டாயிருந்தது, அவனுடைய சகோதரர்களால் வெறுக்கப்பட்டான்.<br>2. யோசேப்புக்கு யாக்கோபு பல வர்ண அங்கியை கொடுத்தார், அவன் மீதுள்ள பாசத்தின் அடையாளமாக இது இருந்தது, ஆனால் இது அவனுடைய சகோதரர்களிடமிருந்து அதிக வெறுப்பைத் தூண்டியது.<br>3. யோசேப்பின் கனவுகள் அவனது பதினொரு சகோதரர்களும் லேயாள் மற்றும் யாக்கோபு (ராகேல் இறந்துவிட்டாள்) அனைவரும் எதிர்காலத்தில் அவனை வணங்குவார்கள் என்பதைக் குறிக்கின்றன.<br>4. யோசேப்பின் சகோதரர்கள் கோபமடைந்து அவனைக் கொல்ல சதி செய்து அவனை இஸ்மவேலருக்கு (மீதியானியர்கள்) விற்றனர். அறியாமலேயே அவர்கள் யோசேப்பின் எதிர்கால மேம்பாட்டிற்கான தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றினர்.<br>5. யோசேப்பு இறந்துவிட்டதாகக் கருதி, தான் மிகவும் நேசித்த மகனுக்காக துக்கப்பட்டார். ‘ஏமாற்றுபவரான’ யாக்கோபு இப்போது ‘ஏமாற்றப்பட்டார்’. |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | மாணவர்கள் தாங்கள் யோசேப்பு என்று கற்பனை செய்யச் சொல்லுங்கள், தங்களுடைய தந்தையான யாக்கோபிற்கு கடிதம் எழுதுகிறார்கள், புதிய வேலையைப் பற்றி அவரிடம் சொல்கிறார்கள்! | கேள்விகளைக் கேட்டு இந்த ஆராய்ச்சியை மீள்பார்வை செய்யவும்: தங்கள் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளையும் தேவன் கட்டுப்படுத்துகிறார் என்பதையும், அவர்கள் ‘தீமைக்கு தீமை’ செய்வதை அவர் விரும்பவில்லை. |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. இந்தக் கதை நம்மை எவ்வாறு ஊக்குவிக்கிறது?<br>2. உங்கள் அன்றாட வாழ்க்கையில் கீழ்ப்படிதலுடனும் உண்மையுடனும் இருப்பது பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? ஆசீர்வாதத்தின் மூலம் நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. எபேசியர் 4: 32 என்பது வாழ்க்கையில் வழிகாட்டும் கொள்கையா என்று கேள்வி எழுப்புங்கள். கிறிஸ்தவராக நாம் எல்லோரையும் நியாயமாகவும் கருணையுடனும் நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோமா? (மத்தேயு 5: 45) |

பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்

நிலை 3 பாடங்கள்

☐ மாணவர்கள் பைபிளைப் பார்க்காமல் இந்த பாடங்களை முடிக்க முடியாது, மேலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பைபிள் வசனப்பகுதிகளைக் குறிப்பிட வேண்டியிருக்கும்.
☐ கேள்விகள் குறுக்கு சொற்கள் மற்றும் சொல் கட்டங்கள், விடுபட்ட சொற்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் உள்ளன.
☐ நமது நோக்கம் என்னவென்றால், அனைத்து மாணவர்களும், அவர்கள் எந்த பைபிளை வைத்திருந்தாலும், கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும்.
☐ பாடங்கள் முற்றிலும் சரியாக இருக்கும்போது, ஒவ்வொரு வாரமும் 20 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன, அதிகபட்சம் ஒரு மாதத்திற்கு 80 மதிப்பெண்கள்.
☐ நிலை 3 - சுட்டிக்காட்டியபடி பொதுவாக ஒரு பதிலுக்கு 1 மதிப்பெண் அளிக்கவேண்டும்.

நிலை 4 ஆராய்ச்சி

☐ இவை நிலை 3 பாடங்களைக் காட்டிலும் கடினமான பதிப்பாகும்.
☐ மிகவும் சிக்கலான கேள்விகள் மற்றும் பதில்கள் தேவைப்படுகிறது.
☐ பாடங்கள் முற்றிலும் சரியானவையாகவும் மேலும் கேள்விகளுக்கு முழு விடை இருக்கும்போதும், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் மற்றும் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள்.

மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகள்

முதலில் இதைச் செய்யுமாறு ஆசிரியர்களைக் கேட்கிறோம்:

☐ ஒவ்வொரு பாடத்தையும் சரிபார்த்து பதில்கள் சரியானதா அல்லது தவறா என்று குறிக்கவும்.
☐ அறிவுறுத்தப்பட்டபடி தேவையான புள்ளிகளை வழங்குங்கள்.
☐ எப்போதும் வெவ்வேறு நிறத்தில் குறிக்கவும், ஒவ்வொரு சரியான பதிலையும் டிக் செய்யவும்.
☐ தேவையான இடங்களில் சரியான பதிலை எழுதுங்கள், எழுத்துப்பிழைகளைச் சரிசெய்யவும், இருப்பினும் இதற்காக எந்த மதிப்பெண்ணும் குறைக்கப்படுவதில்லை.
☐ அரைகுறையான பதில்களுக்கு குறைவான மதிப்பெண்களைக் கொடுங்கள்.
☐ மாதத்தில் பெற்றதை மொத்த மதிப்பெண்களைக் கூட்டி, அதற்கென்று பின் பக்கத்தில் வழங்கப்பட்ட இடத்தில் இதை எழுதவும்.

மிகவும் தாராளமாக இருப்பது அவசியம் மேலும் மாணவர்களை அவர்களின் வேத ஆராய்ச்சியில் ஊக்குவிக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவருக்கு ஊக்கமளிக்கும் வார்த்தையை எழுதுவது உதவியாக இருக்கும், மேலும் இதற்காக இந்தப் பாடத் தாளில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் நல்ல வண்ணந்தீட்டுதல், சுத்தமாக வைத்திருத்தல், பெற்ற மதிப்பெண்கள், பாடத்தைப்பற்றி மாணவரின் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றைப் பற்றி கருத்துகள் கூறலாம்.

கருத்துகளை முடிந்தவரை மாறுபட்டதாக வைக்க முயற்சிக்கிறோம். இதில் கேள்விகள், அறிக்கைகள், கண்டறிந்தவைகள், ஊக்கங்கள் போன்றவை அனைத்தும் இருக்கலாம். இதற்கு சிந்தனை தேவை, ஆனால் மாணவரின் ஆர்வத்தைக் குன்றாமல் வைத்திருப்பது முக்கியம். ஒவ்வொரு மாதமும் அதே அறிக்கை அல்லது கேள்வி மீண்டும் மீண்டும் வருமானால், அது தன் தாக்கத்தை இழக்கிறது.
நிலை 3

பொதுவான கருத்துகள்

“நல்ல வேலை! நீ கேள்விகளை மிகவும் கவனமாகப் படித்திருக்கிறாய். கடைசி கேள்விக்கான உன்பதிலை நான் மிகவும் விரும்பினேன், நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறாய்.”

“ஹாய் ஜொனாதன். உன் கடின உழைப்புக்கு நன்றி. கிட்டத்தட்ட எல்லாவற்றிற்கும் பதிலளிக்க முயற்சித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. விடுபட்டுப் போனவற்றை நான் உனக்காக நிரப்பியிருக்கிறேன்.”

ஆவிக்குரிய கருத்துக்கள்
“மோசே இஸ்ரவேல் மக்களுடன் சில கடினமான நேரங்களைச் சந்தித்தார், ஆனால் எல்லா பிரச்சினைகளையும் தானே தீர்க்க தேவன் அவரை விடவில்லை.”

“தேவனை நேசிக்க தன் தந்தை கற்றுக்கொடுத்ததை யோசேப்பு ஒருபோதும் மறக்கவில்லை. அவன் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தபோதும் இதை நினைவுகூர்ந்தான்.”

“பர்த்திமேயு கர்த்தராகிய இயேசுவிடம் செல்வதில் உறுதியாக இருந்தான். அவன் இப்போது பார்க்க முடிந்ததால் ஏமாற்றமடையவில்லை, கர்த்தராகிய இயேசு மிகவும் சிறப்புவாய்ந்தவர் என்பதை அவன் இப்போது அறிந்துகொண்டான்.”

© Bible Educational Services 2023
www.besweb.com